DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
உலகில் உலகில் சிந்திக்கும் தமிழ் மக்களின் இதயம் இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons)
Sales Representative
416-648-9757
CENTURY 21

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1325 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 27, 2021

# காபூல் விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் பலி



**(உதயன் அலுவலகச் செய்தியாளர்கள்)**

ஆப்கானிஸ்த்தான் காபூல் விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது நேற்று வியாழக்கிழமை 26ம் திகதி தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் பலி.

தலிபான் ஆயுததாரிகள் கைகளுக்குள் ஆட்சி அதிகாரம் சென்றிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டின் காபூல் விமான நிலையத்தை 26ம் திகதி வியாழக்கிழமை திரண்டு சென்று கொண்டிருந்த ஆப்கானிஸ்தான் மக்கள் கூட்டத்தை தாக்கும் வகையில் இரண்டு தற்கொலை குண்டுதாரிகள்கள் மற்றும் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்களை நடத்தியதில், குறைந்தது 60 ஆப்கானியர்களும் 12 அமெரிக்க துருப்புக்களும் கொல்லப்பட்டதாக ஆப்கான் மற்றும் அமெரிக்க இராணுவப் பிரிவு ஆகியன விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)*

# இலங்கையில் நாடெங்கும் ஊரடங்கை அமுல் செய்வது தொடர்பில் இன்று வெளியாகவுள்ள முக்கிய தீர்மானம்

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் தரவுகளை ஆராய்ந்து, தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்கு சட்டத்தை நீடித்தல் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மேலும் நீடிப்பதா என்பது தொடர்பான இறுதி தீர்மானம் இன்று 27ம் திகதி வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

இலங்கையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். இன்று வெள்ளிக்கிழமை கூடவுள்ள கொவிட் 19 ஒழிப்பு ஜனாதிபதி செயலணி, இது தொடர்பான தீர்மானத்தை அறிவிக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் முறையாக பின்பற்றினால், எதிர்வரும் இரண்டு வாரங்களில் கொரோனா தொற்றாளர் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX










# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## வேலை வாய்ப்பு

ஸ்காபுறோ **Thanus Kitchen** நிறுவனத்தில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

1. Kitchen Cabinet Assemblers
2. Painters
3. Flooring Workers
4. General Help

அனுபவம் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு:

**(416) 417-0733**

## Tutoring Available

Private and group tutoring available. Offering help on all subjects up to grade 12.
Learn French language (conversation, vocabulary, written).
Providing help with your assignments, homework, and school work.

**Contact: 647-877-6457 or premithira@hotmail.com**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician

உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## CLEANING வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோ மற்றும் ஈற்றோபிக்கோ ஆகிய இடங்களில் **cleaning** வேலை செய்வதற்கு உடனடியாக ஆட்கள் தேவை.

அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:

**(647) 864-3016** அல்லது **(647) 936-3806**

## TAKE-OUT & CATERING PALACE விற்பனைக்கு உண்டு

**Markham இல்**
**Steeles & Woodbine சந்திப்பிற்கு அருகில்**
**good running South Asian Business**
**விற்பனைக்கு உண்டு.**

**Call: AMAR**

**(416) 988-9518**

## பெண்களுக்கு வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் மார்க்கம்-ஸ்டீல்ஸ் சந்திப்புக்கு அருகில் உள்ள தையல் நிறுவனத்தில் வேலை செய்ய தையல் **(sewing)** தெரிந்த பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

**(416) 419-3078**

## வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள **Rehabilitation Clinic** ஒன்றுக்கு முழு நேர அல்லது பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை.
போதிய ஆங்கில, தமிழ் அறிவு, மற்றும் கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் அவசியம்.

**Email resume to:**
**admin@scarboroughrehab.com**

## வேலை வாய்ப்பு

**Hiring Sewing Machine Operators & General Labour.**
**Full-time Only**
**No Cash Job - Only SIN**
**Possibility to earn up to $22 per hour.**
**Address:**
**Clean Planet**
**5595 Finch Ave. East, Unit #1**
**Scarborough (Markham & Finch)**
**Walk-in or Call:**

**(647) 986-7797**

## CABINET MAKING நிறுவனத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் **cabinet making** நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள **spray painters** உடனடியாகத் தேவை. **Full-time** ஆகவும் **Part-time** ஆகவும் வேலை செய்யலாம். அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே அழைக்கவும்.

**தொடர்புகளுக்கு:**

**(416) 994-7776**

## Renovation Work

**Call us for all your renovation needs:**

- **Basement**
- **Painting**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**
- **Permits, and Construction**

**416-706-8160**

## Crossing Guards Wanted

**With two weeks left before school returns, Staffing Services Inc. is looking to hire school crossing guards in Markham. Residents who have their own transport are invited to visit https://www.markham.ca/wps/portal/home/neighbourhood-services/traffic/school-zones/06-School-crossing-guards and www.staffingsrvs.com for more information or to contact Staffing Services Inc. at 905-737-1600 to apply.**

**Please note that crossing guards are not municipal employees. They work for Staffing Services Inc.**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கை என்னும் சிறிய நாட்டை சீரழிக்கும் குடும்ப அரசியல்

இலங்கையை தற்போது ஆட்சி செய்வது அரசாங்கம் அல்ல, இராபக்ச என்னும் ஒரு குடும்பத்தின் ஆட்சியே அங்கு இடம்பெறுகின்றது என்பதே உலகின் பார்வையாக உள்ள வேளையில் அங்கு கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசியல் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் திண்டாடுவதையே அங்கு வாழும் மக்கள் மாத்திரம் அல்ல, அங்கிருந்து புலம் பெயர்ந்து வந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் சிங்கள மக்கள் அனைவரும் அவதானித்து வருகின்றார்கள்.

அங்கு குடும்ப அரசியலில் ஊறியதால் உண்டான அரசியல் அதிகாரம், தேடிக்கொண்ட பொருளாதாரம் என அனைத்து வாய்ப்புக்களையும் பெற்றுக் கொண்ட ராஜபக்ச குடும்பம் இலங்கையை நிர்வகிப்பதில் தள்ளாடுவதையே நாம் பார்க்கின்றோம்.

இதேவேளை, உலக நாடுகள் அனைத்திலுமே குறுகிய காலப் பகுதிக்குள் பரவிக் கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதானால், ஒவ்வொரு நாட்டினதும் மக்கள் அனைவரையும் அவரவர் வீட்டுக்குள்ளேயே முடக்குவதுதான் சரியான தீர்வாகுமா? அவ்வாறானால் உலக நாடுகளில் கொரோனா தொற்று முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை எல்லா நாடுகளிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதான் பொருத்தமான நடவடிக்கையாகுமா?

இத்தகைய வினாக்கள் தொடர்பாக நன்கு சிந்திக்க வேண்டியதொரு காலகட்டத்துக்கு உலகம் இப்போது வந்துள்ளது. எனெனில் ஒவ்வொரு நாட்டிலும் எத்தனையோ தடவைகளில் தொடர்ச்சியாக முழுமையான ஊரடங்கு உத்தரவைப் பேணி, இறுக்கமான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்திய போதிலும் அதன் பயன் நிரந்தரமாகக் கிடைக்காமலே போயுள்ளது. தொடர்ச்சியான, கண்டிப்பான ஊரடங்கு உத்தரவு நடைமுறைகளினால் கொரோனா தொற்று பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றதென்பது உண்மைதான்!

ஆனால் கொரோனா பரவலின் அந்த வீழ்ச்சி தற்காலிகமானது. அந்த வீழ்ச்சி நிலைமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமானால், நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தம்மையும், தம்மைச் சூழவுள்ளோரையும் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மிகவும் அவதானமான முறையில் நடந்து கொள்வதுதான் ஒரே வழியாகும். அவ்வாறன்றி அந்த வீழ்ச்சியை நம்பியபடி மக்கள் அலட்சியமாகச் செயற்படுவார்களேயானால், வீழ்ச்சி நிலைமையானது மீண்டும் அலையாக உருவெடுப்பதற்கு நீண்ட காலம் தேவையில்லை.

உதாரணமாக, இலங்கையை எடுத்துக்கொண்டால் அங்கு இன்று அறிவிக்கப்படவுள்ள அரசாங்கத்தின் முடக்கம் தொடர்பான முடிவுகள் என்ன பாதிப்புக்களை மக்களுக்கு தரவுள்ளன என்பதே அங்குள்ள மக்கள் அச்சத்துடன் எதிர்பார்ப்பதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

இலங்கையை மீண்டும் முடக்கத்திற்குள் கொண்டு சென்றால் அங்குள்ள சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தவும் தம் பிள்ளைகளுக்கு உணவு போன்றவற்றை ஏற்பாடு செய்ய எவ்வளவிற்கு சவால்களை எதிர் கொள்ளப்போகின்றார்கள் என்பதே அனைவரினதும் மனங்களில் எழுந்துள்ள கேள்விகளாகும்.

எனவே கொரோனா பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதானால் எக்காலமும் ஊரடங்கு உத்தரவு அவசியமா? இல்லையேல் கொரோனா பரவலின் தன்மையைப் புரிந்து கொண்டு ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளைப் பேணியவாறு நடந்து கொள்வதுதான் ஒரே வழியா? இவ்விரு தெரிவுகளிலும் பொருத்தமானதொன்றைத் தெரிவு செய்ய வேண்டிய காலகட்டத்தில் இலங்கை அரசு உள்ளது. ஏனெனில் உலகை விட்டு கொரோனா தொற்று நீங்கி விடாத நிலையில் இலங்கை என்னும் மாங்கனித் தீவில் மக்கள் நோயின் பாதிப்பாலும் ஆட்சியாளர்களின் சீரற்ற தலைமைத்துவத்தாலும் கீழே தள்ளப்படுகின்றனர் என்பதே உண்மை.

# "கொரோனாவிலிருந்து அரசு தம்மை பாதுகாக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டனர்"

## *என்கிறார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி*

கொரோனாவிலிருந்து அரசு மக்களைப் பாதுகாக்கும் என்ற விடயத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இதனால் தாமே சில முடிவுகளை எடுத்து வருகின்றனர் என திருகோணமலை மாவட்ட பாராளுன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். வியாழக்கிழமை (19) ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கொரோனா நாடு முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கையும் மரணமடைவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. வைத்தியசாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்கள் வைத்திய வசதிக்காக அல்லல் படுகின்றனர்.

இதனைக் கவனத்தில் கொண்டு வைத்தியர்களும் ஏனைய சுகாதாரப் பகுதியினரும் சில நாட்களுக்காவது நாடு முடக்கப்பட வேண்டும். அதன் மூலம் கொரோனா தொற்றையும் கொரோனா மரணங்களையும் குறைக்க முடியும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேபோல அரசியல் தலைவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

அரசு மக்களைப் பாதுகாக்கும் விடயத்தில் மிகவும் பலவீனமாக உள்ளது என்பதை உணர்ந்த மக்கள், அரசில் நம்பிக்கை இழந்து விட்டனர். இதனால் ஆங்காங்கே பிரதேச ரீதியாக மக்கள் ஒன்றிணைந்து தத்தமது பகுதிகளில் சுய முடக்கத்தை பிரகடனப்படுத்தி வருகின்றனர்.

# வவுனியாவில் 244 பேருக்கு கோவிட் தொற்று உறுதி: மூவர் மரணம்



வவுனியாவில் மேலும் 244 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று (26) இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 244 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் , மரணித்த மூவரது உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.






# ஏழை விவசாயிகளை பல ஆண்டுகளாக ஏமாற்றுவது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மிக மோசமான செயலாக உள்ளது

## -மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் காணி அமைச்சருக்கு அவசர கடிதம்

(மன்னார் நிருபர்)

இலுப்பைக்கடவை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் இன்று (27) காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன விற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்...

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழ மண்டல குளம் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி 250 ஏக்கர் உள்ளது.

இக் காணி கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இலுப்பைக்கடவை அந்தோனியார் புரம் பகுதியில் உள்ள 95 பேர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு முறையாக காணி கச்சேரியும் நடைபெற்றுள்ளது.காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்கேற்புடன் பல கலந்துரையாடல்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நடை பெற்றுள்ளது.

ஆகவே பிரதேச செயலாளரினால் பலமுறை எழுத்து மூலம் பெயர் பட்டியல் இரண்டு ஏக்கர் வீதம் வழங்குமாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் இணக்கமும் காணப்பட்டுள்ளதாக அறிகிறோம்.




ஆனால் இதுவரை எந்த விதமான ஆக்கப்பூர்வமான பதில் வழங்கவில்லை. மாறாக தற்போது அரசியல் செல்வாக்குடன் வெளி மாவட்டங்களை சேர்ந்த தனிநபர்களுக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழு நூறு ஏக்கருக்கு மேல் வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தற்போது காணி துப்புரவாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

இவ் அனுமதி கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

எனவே தனி நபர்களின் காணி துப்புரவாக்கும் பணியை தற்காலிகமாக நிறுத்தி கடந்த 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஏலவே பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைய உள்ள பயனாளிகளுக்கு உடனடியாக இரண்டு ஏக்கர் வீதம் காணி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் .பின்னர் ஏனையவர்களுக்கு வழங்குங்கள்.

ஏழை விவசாயிகளை பல ஆண்டுகளாக ஏமாற்றுவது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மிக மோசமான செயற்பாடு ஆகும். ஆகவே தயவு செய்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொருட்களின் விலை உயர்வால் மக்கள் அவதி — *பந்துல வுக்கு செல்வம் கடிதம்!*

(மன்னார் நிருபர்)

பொருட்களின் விலை உயர்வால் மக்கள் அவதிப்படுவதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர், வர்த்தக அமைச்சர் பந்துல குண வர்த்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.



அந்தக் கடித்தத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர், “அத்தியாவசியப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் அல்லது கட்டுப்பாட்டு விலையில் எந்தப் பொருட்களையும் பெற முடியாத சூழ்நிலை என் தேர்தல் மாவட்டங்களான மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவில் உள்ளது.

ஏழைகளின் உணவுப் பொருட்களாகக் கருதப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் விற்கப்படுகின்றன.

இந்த விவகாரத்தை ஆராய எந்த அரச அதிகாரிகளும் முன் வருவதாக தெரியவில்லை. பொருட்களின் விலை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் கூட நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மாறுபட்டு கூடிய விலையில் பொருட்கள் யாவும் விற்கப்படுகின்றன.

இதற்கு காரணம் அரச அதிகாரிகளின் அசமந்த போக்கு என்றே கூறவேண்டும். மக்கள் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் தங்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ் நிலையே இங்கு காணப்படுகிறது.

எனவே இவ் விடயத்தினை கவனத்தில் இருத்தி இந்த மக்களின் அவதி நிலையினை போக்க உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

# அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் நவம்பருக்குள் தடுப்பூசி — *சுகாதார அமைச்சர்*



எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் 18 வயதிற்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் முழுமையாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கியூப தூதுவரை நேற்று (வியாழக்கிழமை) சந்தித்து கலந்துரையாடிய போது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை செப்டம்பர் மாத நடுப்பகுதியில் 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் முழுமையான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதை அடுத்து 3ஆம் தடுப்பூசி வழங்குவது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை எதிர்காலத்தில் வீடுகளுக்கு சென்று அன்டிஜென் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 36 பேர் கொரோனாவினால் உயிரிழப்பு



மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 36 பேர் கொரோனாவினால் உயிரிழந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார். நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நா.மயூரன் மேலும் கூறியுள்ளதாவது, “மாவட்டத்தில் நாளாந்தம் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. இந்நிலையில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. முதலாவது தடுப்பூசி 92.41 வீதமானவை ஏற்றப்பட்டுள்ளதுடன் அதில் ஆக குறைந்தளவு தடுப்பூசி 78.84 வீதம் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில் நேற்று முன்தினம், இரண்டாவது தடுப்பூசி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்றுவரை 27.33 வீதமான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை இராணுவத்தினரும் வீடு வீடாக சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றனர். ஆகவே மக்கள், தற்போதைய சூழ்நிலையை உணர்ந்து, அநாவசியமாக வீடுகளை விட்டு வெளியேறுவதனை தவிர்த்துக்கொள்ள வேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# மங்கள சமரவீர: இலங்கை தவறவிட்ட ஒரு ஆளுமை

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**



**புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை**
**வெற்றிபெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை**

**படம்: அன்னை, பாடல்: கவிஞர் கண்ணதாசன்**
**பாடியவர்: ஜோ ப சந்திரபாபு**

இந்த பாடலிலுள்ள வரிகள் அமரத்துவம் பெற்றவை. கவிஞர் கண்ணதாசன் எழுதிய ஆயிரக்கணக்கான பாடல்கள் காலத்தை விஞ்சி நிற்பவை. அப்படியான ஒரு பாடல்தான் அன்னை திரைப்படத்தில் வரும் இந்தப் பாடல். உழைப்பு, திறமை, நேர்மை போன்ற பல நல்ல குணங்கள் ஒரு மனிதனிடம் நிரம்பியிருந்தாலும் அவை எல்லாவற்றிற்கும் மேலான ஏதோ ஒன்று-அது இறைவனின் கொடை அல்லது அதிர்ஷ்டம். இதற்கும் மேலாக சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருக்க வேண்டும். இவை அனைத்தும் அல்லது இதில் பல அம்சங்கள் இருந்தாலும் ஒருவரின் வெற்றி உறுதியானது அல்ல என்பதே கவிஞர் அந்த பாடலில் உணர்த்தியிருப்பார்.

ஒரு மனிதனின் வாழ்க்கைப் பாதைக்கு "கூகிள் மேப்" உதவி செய்யாது. பயணிக்கும் பாதை எப்படியானது, அது எங்கு இட்டுச் செல்லும் என்று "கூகிள் ஆண்டவரால்" கூற முடியாது. அதிலும் குறிப்பாக அரசியல் வாழ்க்கைக்கு இது மிகவும் பொருந்தும். இதற்கு அண்மையில் காலமான முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் விதிவிலக்கல்ல.



அவருக்குச் செலுத்தப்பட்ட அஞ்சலிகள் அவரது பெருமை மற்றும் பங்களிப்பை பறைசாற்றும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன், சிறீதரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் மனோ கணேசன் மற்றும் திகாம்பரம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் போன்றவர்கள், சம்பிரதாய ரீதியில் மட்டுமின்றி தனிப்பட்ட முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க போன்றவர்களின் அஞ்சலியில் ஆழ்ந்த அர்த்தங்கள் இருந்தன.

மங்கள சமரவீரவிற்கு நாட்டின் பிரதமர் போன்ற உயர்ந்த பதவிக்கு வருவதற்கான தகுதிகள் இருந்தன என்று அவரை நன்கு அறிந்தவர்கள் கூறுகின்றனர். அவரது பொதுவுடைமை கொள்கை நாட்டில் பரந்துபட்ட அளவிற்கு அவருக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அவர் "கிங்" ஆக முடியவில்லை என்றாலும் பல சந்தர்ப்பங்களில் "கிங் மேக்கராக" இருந்துள்ளார்.

அவரை ஓரிரு முறை நான் நேரில் சந்தித்த போதும், பல முறை தொலைபேசியில் பேசிய போதும் அவரிடம் தேசம் அனைவருக்கும் பொதுவானது, போர் மூலம் தீர்வை பெற்றுவிட முடியாது, பேச்சுவார்த்தை அவசியம், அரசு விட்டுக்கொடுப்புகளில் ஈடுபட வேண்டும், தமிழர்கள் தரப்பில் சில நியாயங்கள் உள்ளன என்று கூறியதை நான் நினைவுகூர்கிறேன்.



எனினும் இலங்கை அரசியலில் அனைவரைப் போலவும் அவருக்கும் சில பின்னடைவுகள், அரசியல் வாழ்வில் சில கருப்புப் பக்கங்கள் இருந்தன. அரசியல் சூழல் மற்றும் நெருக்கடி காரணமாக ஒரு காலகட்டத்தில் அரசில் நிலையையொட்டி கடும்போக்கு நிலைப்பாட்டை எடுத்தார். ஆனால் அதற்கு அரசு எனும் ஒரு தரப்பை மட்டுமே குறைசொல்ல முடியாது.

முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற கொடூரமான யுத்தத்தில் விடுதலைப் புலிகளும் பல சந்தர்ப்பங்களில் மிகவும் கடும்போக்கு நிலைப்பாட்டை எடுத்து விட்டுக்கொடுக்காத தன்மையை முன்னெடுத்தார்கள். போர் முடிந்து 12 ஆண்டுகளுக்கும் மேலாகும் சூழலில் இன்றைக்கும் தமிழ் மக்களுக்கான நியாயம் கிடைக்கவில்லை என்பதை மறுக்க முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்னும் தமது சொந்தங்களைத் தேடுகிறார்கள், பலரது காணிகள் இன்னும் திருப்பியளிக்கப்படவில்லை, எங்கு இராணுவம் எதிலும் இராணுவம் எனும் அச்சத்தில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் துன்பங்கள் மற்றும் துயரங்களுக்கு ஒரு தரப்பின் மீது மட்டுமே பழி போடுவது நேர்மையான செயலாக இருக்காது. பல கல்விமான்கள், அரசியல் அவதானிகள், பொருளாதார வல்லுநர்கள், இராணுவ ஆய்வாளர்கள், பன்னாட்டு இராஜதந்திரிகள் போன்றோர் ஒரு விடயத்தில் உடன்படுகின்றனர். அது, சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் ஆர்வமாகவும் தீவிரமாகவும் இருந்தார். போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் எட்டப்பட வேண்டும் என்பதில் சந்திரிகா பண்டாரநாயக்க ஆரம்பத்தில் எடுத்த முயற்சிகளை மறுக்க முடியாது. அதற்கு அவரது வலதுகரமாக இருந்து செயல்பட்டவர் மங்கள சமரவீர.

தமிழ் மக்களின் மனதில் ஆறாத வடுவாக இருப்பது யாழ்ப்பாண நூலக எரிப்பு. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு ஈனச்செயல். கலாச்சாரத்தின் மேன்மையை உணராத காடையர்கள் முன்னெடுத்த அயோக்கியத்தனம். நூல்களை அழித்துவிட்டால் சிங்கள பௌத்த பேரினவாதம் அச்சுறுத்தி நிலைநாட்டப்படும் என்று எண்ணிய கயவர்களின் செயல் அது. எனினும் அதை மீளக் கட்டமைக்க சந்திரிகாவின் ஆதரவுடன் மங்களவின் மனதில் உதித்த எண்ணமே "செங்கல்லும் புத்தகமும்".

எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தைக் கட்டியெழுப்ப புலத்திலுள்ளோரும் புலம்பெயர்ந்தவர்களும் செங்கல்லும் புத்தகமுமாக அளிக்க முன்வரவேண்டும் என்ற திட்டத்தை முன்வைத்தார் மங்கள சமரவீர. அதாவது பெருமை மிகுந்த அந்த நூலகத்தை மீட்டும் கட்டுவதற்கு மக்கள் பொருளுதவி அல்லது புத்தகங்களை அளித்து உதவிட வேண்டும் என்றது அந்த திட்டம். அதில் கணிசமான முன்னேற்றமும் காணப்பட்டது என்று பலர் கூற நான் கேள்விப்பட்டுள்ளேன். அந்த திட்டத்தின் வெற்றியின் மூலம் இழந்த அவநம்பிக்கையை தமிழ் சிங்கள சமூகங்களுக்கு இடையே ஓரளவுக்கு கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையில் தான் உறுதியாக இருந்ததாக அவர் கூறியுள்ளார். ஆனால், அப்படியான நம்பிக்கை ஏற்பட இருதரப்பிலிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட இதிய சுத்தியுடன் கூடிய ஒத்துழைப்பும் அங்கீகாரமும் கிடைக்கவில்லை. தமிழர் தரப்புக்கும் அதில் பங்குண்டு.




அதிகார பரவலாக்கலில் மங்கள மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அவரது அந்த முயற்சியை புரிந்து கொள்ள காலத்தில் சற்று பின் நோக்கிச் செல்ல வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினரில் பலர் அதை அறியாமல் இருக்கக் கூடும். சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் ஐ டி என் தொலைக்காட்சியில் அதிகாரப் பரவலாக்கம், சமாதானம், நல்லுறவு தொடர்பான நிகழ்ச்சிகள் சான்றாக உள்ளன. ஐ டி என் நிகழ்ச்சிகளில் அவர் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்று பல மூத்த அரசியல் தலைவர்கள் என்னிடம் கூறியுள்ளனர்.

அந்த விவாதங்களில் மங்கள சமரவீர கூறிய சில கருத்துக்கள் தென்னிலங்கை மக்களின் கவனத்தை ஈர்த்தன. நாடு அனைத்து மக்களுமானது. அதை தமக்கு மட்டுமே உரியது என்று எந்த இன, மத, மொழியைச் சேர்ந்தவர்கள் கோர முடியாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

"புலிகள் வேறு மக்கள் வேறு அல்ல, அதற்காக மக்கள் எல்லாம் புலிகளும் அல்ல. புலிகள் ஏன் உருவானார்கள் என்பதை நீங்கள் விளங்காதவரை யாராலும் இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியாது - இது தான் நீங்கள் விடும் பிழை" என்று ஐ டி என் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கூறியதை மூத்த செய்தியாளர் ஒருவர் பொதுவெளியில் பகிர்ந்துள்ளார்.

ஆனால் நீலன் திருச்செல்வனின் கொலை பல முன்னெடுப்புகளைப் புரட்டி போட்டது. தேசிய அளவிலான விவாதத்தில் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் மற்றும் நீலன் திருச்செல்வன் ஆகியோரை பங்குபெற வைத்து அரசியல் தீர்வு குறித்து தொலைக்காட்சி விவாதத்தில் பங்குபெற வைத்தது மங்கள சமரவீரவின் முன்னெடுப்பே என்பதை மறுக்க முடியாது.

இலங்கை ஒரு நாடு. அதில் இன, மத வேறுபாடு இருக்கக் கூடாது என்பதில் மங்கள சமரவீர உறுதியாக இருந்தார். அதை நோக்கிய ஒரு படியாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆரம்பித்த "வெண்தாமரை" இயக்கம்.

ஆனால் சமாதானம் மற்றும் நல்லுறவை முன்னெடுத்துச் செல்ல முயன்ற வேளையில், சில கொலைகள், விரும்பத்தாக சம்பவங்கள் அந்த முன்னெடுப்பை முறியடித்தன.

அவரது தந்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தாலும், அவரது அரசியல் வாழ்க்கை



பெருமளவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பின்னிப் பிணைந்திருந்தது. சந்திரிக்கவுக்கு பிறகு மஹிந்த ராஜபக்ச பக்கம் நின்றார். பின்னர் போர் தொடர்பான நிலைப்பாட்டில் மஹிந்தவுடன் முரண்பட்டார். அடுத்து வந்த தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியதில் அவருக்கு பெரும் பங்கு இருந்தது. ஸ்ரீலங்கா சுந்திர கட்சி மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்கவின் குடும்பத்துடன் நெருக்கத்தைப் பேணி வந்தார். பின்னர் அக்கட்சியின் போக்கு பிடிக்காமல் அரை மனதுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார். ரணில் விக்ரமசிங்கவின் "சர்வாதிகார" அரசியல் பிடிக்காததால் ஐ தே க விலிருந்து விலகி சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்க மக்கள் சக்தியில் இணைந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு பிறகு அதிலிருந்தும் விலகிக் கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியிலும் பேரினவாதம் நிலவுகிறது, அதன் காரணமாகவே தேர்தலில் போட்டியிடவில்லை என்று அவர் கூறியதாக அவருக்கு நெருக்கமான அரசியல்வாதி ஒருவர் அந்த சமயத்தில் என்னிடம் கூறினார்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை ஆழமாக விளங்கிக் கொண்ட மிகச்சில அரசியல்வாதிகளில் மங்கள சமரவீரவும் ஒருவர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே அவர் கொள்கையாக இருந்தது. சுட்டுக் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வன் அரசியல் தீர்வு குறித்து முன்வைத்த பிரேரணையில் மங்கள சமரவீரவுக்கு மறைமுக பங்கிருந்தது. அந்த தீர்வுத்திட்டம் தமிழர்களுக்கு முழுமையாக ஏற்புடையதாக இருக்காவிட்டாலும், அதுவொரு தொடக்க புள்ளியாக இருந்திருக்கும் என்று நார்வேயின் இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதி எரிக் சொல்ஹைம் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

மங்கள சமரவீர இலங்கை அரசியலில் சுமார் 30 ஆண்டுகள் முக்கியமான ஒரு ஆளுமையாக இருந்தார். புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்டிருந்தார். பொதுவுடைமை, அதிகாரப் பரவலாக்கம், தேசம் அனைவருக்குமானது, பேச்சு வார்த்தையின் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அனைத்து அரசியல்வாதிகளைப் போல அவர் மீது விமர்சனங்கள் இருந்தன. சில தமிழ் தரப்புக்கள் அவரும் ஒரு பேரினவாதியே என்று குற்றச்சாட்டுக்களை வைத்தன.

எவ்வாறாயினும் அவர் இலங்கையில் தவிர்க்க முடியாத ஒரு ஆளுமையாகவும், தவறவிட்ட ஒரு ஆளுமையாகவும் இருந்தார் என்பது உண்மை. ஒருவேளை அவர் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக வந்திருந்தால் இலங்கை வேறு பாதையில் பயணித்திருக்கக் கூடும்.

இந்தியா செய்திகள்
India News

# புலம்பெயர் தமிழர்களுக்கெதிராக திட்டமிட்டு செய்யப்படும் அவதூறுப்பரப்புரைக்கு சீமான் கண்டனம்

## புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கெதிராக திட்டமிட்டுசெய்யப்படும் அவதூறுப்பரப்புரைகளையும், பொய்யுரைகளையும் தடுத்து முறியடிக்க உலகத்தமிழர்கள் துணைநிற்க வேண்டும் - சீமான் கோரிக்கை

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் , "அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை" எனும் அமைப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் தமிழ்க்குழந்தைகளுக்கான தமிழ்ப்பாடப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறு முழுமையாகத் திரிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. ஈழத்தின் பூர்வக்குடிகள் தமிழர்கள் இல்லை எனவும், தமிழ் மன்னர்கள் சிங்கள மக்களைத் துன்புறுத்தினர் எனவும், தமிழர்கள் போராடியதால்தான் கொல்லப்பட்டனர் எனவும் கற்பனைகளை உருவாக்கி, உண்மைக்குத் துளியும் தொடர்பில்லாத பொய்களை தமிழ் இன வரலாறாக மாற்ற முனையும் வன்மச்செயல்பாடுகள் கடும் கண்டனத்திற்குரியது. யாழ் நூலகம் சிங்களர்களால் எரியூட்டப்படவில்லையெனவும், தமிழக மன்னர்கள் படையெடுத்துப் பின்புதான், தமிழர்கள் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தனர் எனவும், சிங்களர்களின் வருகைக்குப் பிறகே, இலங்கையின் வரலாறு தொடங்குகிறது எனவும் கற்பனையாகச் சித்தரிக்கப்பட்டு, ஈழ வரலாறே ஒட்டுமொத்தமாக மாற்றி வேறொரு கோணத்தில் எழுதப்பட்டிருப்பது உலகத்தமிழர்களை உள்ளம் கொதிக்கச்செய்கிறது.


இலங்கை அரசின் பாடப்புத்தகங்களே தமிழர்களின் சமயத்தை சைவம் எனக் குறிப்பிடும்போது, தற்போது வெளியிடப்பட்டிருக்கும் இப்பாடநூல்களில் தமிழர்களை, "இந்துக்கள்" எனக்குறிப்பிப்பதன் மூலம், சிங்களப்பேரினவாதம் நிகழ்த்திய இனப்படுகொலையை பௌத்த மதத்தினருக்கும், இந்து மதத்தினருக்குமான மத மோதலாக சுருக்கி, காட்ட முனையும் சூழ்ச்சி அம்பலமாகிறது. இவ்வாறு தமிழர்களின் வரலாற்றைத் திரித்துக்கூறி, அடுத்த தலைமுறைப்பிள்ளைகளுக்குத் தவறாகக் கற்பிப்பதன் மூலம் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இழிவுப்படுத்தி, அவர்களது தாயகப்பற்றையும், இன உணர்வையும் மழுங்கடிக்கச்செய்யும் வஞ்சகச்செயல் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகிறது என்பது தெளிவாகிறது.

உலகின் மூத்தத் தொல்குடி சமூகமான தமிழினத்தின் பழம்பெருமையையும், பெரும்புகழையும் பறைசாற்ற வரலாற்றுச்சான்றுகள் இல்லாது இலக்கியச்சான்றுகளே தரவுகளாக இருப்பது எந்தவொரு இனத்திற்கும் நேர்ந்திடக்கூடாப் பெருந்துயரமாகும். இத்தகைய துயர்மிகு நிலையில், "வரலாற்றில் அடிமைப்படுத்தப்பட்டு, அழித்தொழிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான வரலாற்றைத் தாங்களே படைப்பார்கள்" எனும் அண்ணல் அம்பேத்கரின் முதுமொழிக்கேற்ப, தமிழர்களின் வீரம்செறிந்த விடுதலைப்போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி, இன ஓர்மையடைந்து மீளெழுச்சிகொள்வதற்கும், இழந்தத் தாயகத்தை போராடி மீட்டெடுப்பதற்குமாக வருங்கால தமிழ்த்தலைமுறையினருக்குக் கொண்டுசேர்ப்பதென்பது தலையாயக் கடமையாகும். அதனைத் தகர்த்து முறியடிக்கும் வகையில் நடைபெறும் இத்தகைய ஈனச்செயல்கள் பெருஞ்சினத்தைத் தருகிறது.

ஆகவே, புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கெதிராக ஒரு சில அமைப்புகளால் பாடநூட்கள் எனும் பெயரில் திட்டமிட்டுசெய்யப்படும் அவதூறுப்பரப்புரைகளையும், உள்நோக்கத்துடனான பொய்யுரைகளையும் தடுத்து முறியடித்து, தமிழர்களின் மெய்யான வரலாற்றை நிலைநிறுத்த துணைநிற்க வேண்டுமென உலகத்தமிழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையின் முக்கிய கூறுகள்:



- கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், "அனைத்துலகத்தமிழர் கல்விப்பேரவை" எனும் அமைப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் தமிழ்க்குழந்தைகளுக்கான தமிழ்ப்பாடப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறு திரிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.
- ஈழத்தின் பூர்வக்குடிகள் தமிழர்கள் இல்லை எனவும், தமிழர்கள் போராடியதால்தான் கொல்லப்பட்டனர் எனவும் கற்பிதங்களை உருவாக்கி, அபத்தக்கதைகளை தமிழ் இன வரலாறாக மாற்ற முனையும் வன்மச்செயல்பாடுகள் கடும் கண்டனத்திற்குரியது.
- சிங்களர்களின் வருகைக்குப் பிறகே, இலங்கையின் வரலாறு தொடங்குகிறது எனக் கற்பனையாகச் சித்தரிக்கப்பட்டு, ஈழ வரலாறே ஒட்டுமொத்தமாக மாற்றி வேறொரு கோணத்தில் எழுதப்பட்டிருப்பது உலகத்தமிழர்களை உள்ளம் கொதிக்கச்செய்கிறது.
- இப்பாடநூல்களில் தமிழர்களை, "இந்துக்கள்" எனக்குறிப்பதன் மூலம், சிங்களப்பேரினவாதம் நிகழ்த்திய இனப்படுகொலையை பௌத்த மதத்தினருக்கும், இந்து மதத்தினருக்குமான மத மோதலாக சுருக்கி, காட்ட முனையும் சூழ்ச்சி அம்பலமாகிறது.
- இவ்வாறு தமிழர்களின் வரலாற்றைத் திரித்துக்கூறுவதன் மூலம் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இழிவுப்படுத்தி, அவர்களது தாயகப்பற்றையும், இன உணர்வையும் மழுங்கடிக்கச்செய்யும் வஞ்சகச்செயல் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகிறது.
- தமிழினத்தின் பழம்பெருமையையும், பெரும்புகழையும் பறைசாற்ற வரலாற்றுச்சான்றுகள் இல்லாது இலக்கியச்சான்றுகளே தரவுகளாக இருப்பது எந்தவொரு இனத்திற்கும் நேர்ந்திடக்கூடாப் பெருந்துயரமாகும்.
- தமிழர்களின் வீரம்செறிந்த விடுதலைப்போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி, இன ஓர்மையடைந்து மீளெழுச்சிகொள்வதற்கும், இழந்தத் தாயகத்தை போராடி மீட்டெடுப்பதற்குமாக வருங்கால தமிழ்த்தலைமுறையினருக்குக் கொண்டுசேர்ப்பதென்பது தலையாயக் கடமையாகும். அதனைத் தகர்த்து முறியடிக்கும் வகையில் நடைபெறும் இத்தகைய ஈனச்செயல்கள் பெருஞ்சினத்தைத் தருகிறது.
- ஆகவே, புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கெதிராக ஒரு சில அமைப்புகளால் பாடநூட்கள் எனும் பெயரில் திட்டமிட்டுசெய்யப்படும் அவதூறுப்பரப்புரைகளையும், உள்நோக்கத்துடனான பொய்யுரைகளையும் தடுத்து முறியடித்து, தமிழர்களின் மெய்யான வரலாற்றை நிலைநிறுத்த துணைநிற்க வேண்டுமென உலகத்தமிழர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

உலக செய்திகள்
World News

# சில செல்வந்த நாடுகளின் மூன்றாவது, "பூஸ்டர்" தடுப்பூசித் திட்டத்தை உலக சுகாதார அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது

உலகில் உள்ள சில செல்வந்த நாடுகள் முதலிரண்டு கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு மூன்றாவதாக, "பூஸ்டர்" என்னும் மேலதிகமான கொவிட்-19 தடுப்பூசித் திட்டத்தைத் ஆரம்பிப்பது குறித்து உலக சுகாதார அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தத் திட்டத்தால் வளரும் நாடுகளிலும் வறிய நாடுகளிலும், கோவிட்-19 தடுப்பூசி கிடைப்பது இன்னும் சிரமமாகலாம் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளையில், ஆபிரிக்கக் கண்டத்தில் தடுப்பூசி முயற்சிகள் மிகவும் பின்தங்கியுள்ளதை அமைப்பு சுட்டிக்காட்டியது. அங்கு இரண்டு வீதத்தினர் மட்டுமே முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். இவ்வாண்டு இறுதிக்குள், ஆபிரிக்க மக்கள்தொகையில் குறைந்தது 30 வீதத்தினருக்கு தடுப்பூசி போட உலக சுகாதார அமைப்பு திட்டமிடுகிறது. அங்கு சுமார் 1.3 பில்லியன் பேர் வாழ்கின்றனர்.

இந்நிலையில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க மூன்றாவது முறை தடுப்பூசி வழங்கும் திட்டத்தை அமெரிக்கா அண்மையில் அறிவித்தது. இந்தத் திட்டம் இஸ்ரேலில் ஏற்கனவே அமுலில் இருப்பதோடு ஐரோப்பாவிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எனினும் அமெரிக்காவில் தடுப்பூசி உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுவதாக, அந்நாட்டின் முன்னணித் தொற்றுநோய் நிபுணர் ஆண்டனி பௌச்சி கூறியுள்ளார். இகுறைந்த, மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளுக்கு மில்லியன் கணக்கான தடுப்பூசிகளை வழங்க, அவ்வாறு செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# மத்திய கிழக்கில் நோய்த் தொற்றினால் அதிகம் தாக்கப்பட்டுள்ள ஈரானில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100,000ஐ தாண்டியது

மத்திய கிழக்கு நாடுகளில் கொரோனா நோய்த் தொற்றினால் அதிகளவு தாக்கப்பட்டுள்ள ஈரானில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100,000ஐ தாண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய கிழக்கில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடான ஈரான் தற்போது ஐந்தாவது அலை பாதிப்பை எதிர்கொண்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த வியாழக்கிழமை முடிவடைந்த 24 மணி நேரத்திற்குள் 564 பேர் உயிரிழந்ததாக ஈரான் சுகாதார அமைச்சு தெரிவித்தது. தினசரி நோய்த் தொற்று சம்பவங்களும் 31,266 ஆக பதிவாக 4,587,683 ஆக அதிகரித்துள்ளது. எனினும் நோய்த் தொற்றின் உண்மையான பாதிப்பு கூறப்படுவதை விடவும் அதிகம் என்ற நிபுணர்கள் நம்புகின்றனர். ஈரானில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வேகமாக பரவக்கூடிய டெல்டா திரிபின் பாதிப்பு அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் அந்நாட்டில் 12,000 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை ஆறு நாள் முடக்கநிலை அமுல்படுத்தப்பட்டதோடு, மாகாணங்களுக்கு இடையிலான தனிப்பட்ட பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டு, அரச கட்டடங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற வர்த்தகங்கள் மூடப்பட்டன. 83 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ஈரானில் 20 வீதத்திற்கும் குறைவானவர்களுக்கே தடுப்பூசி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதாக ஈரானிய அரசு தன் நாட்டு மக்களுக்கு உறுதி அளித்துள்ளது எனவும் அறியப்படுகின்றது.

# கொரோனா ஆபத்து அவுஸ்த்திரேலியாவை நெருங்குகின்றதா?

மிகவும் ஆபத்தான டெல்டா கொரோனா வைரஸ் திரிபின் ஆக்ரோசமான பரவல் உலகின் சில நாடுகளைத் தாக்க முற்பட்டுள்ள இந்த வேளையில் மேற்படி பயங்கரமான வைரஸை கட்டுப்பாடுத்துவதில் அவுஸ்திரேலிய நாட்டின் நிர்வாகம் போராடி வரும் நிலையில் அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரான சிட்னியில் முடக்கநிலை செப்டெம்பர் இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அந்த நகரில் உள்ள ஐந்து மில்லியன் மக்களும் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வீட்டில் தங்கியிருக்கும் கட்டுப்பாட்டுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். எனினும் கடந்த இரு வாரங்களில் நோய்த் தொற்று இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது. நேற்று 642 புதிய தொற்றுச் சம்பவங்கள் பதிவானதோடு வியாழனன்று 681 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த நகரில் மோசமாக பாதிக்கப்பட்ட புறநகர் பகுதிகளில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

"இந்த சமூகத்தின் பெரும்பாலானவர்கள் சரியானதையே செய்தபோதும் எமது சுகாதார மற்றும் பாதுகாப்பிற்காக இந்த கடினமான முடிவுகள் எடுக்கப்பட்டதை இட்டு நான் வருந்துகிறேன்" என்று நியு சவுத் வேல்ஸ் மாநில முதலமைச்சர் கிளாடி பிரஜிக்லயன் தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஆரம்பித்ததில் இருந்து கடந்த வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் தினசரி நோய்த் தொற்று புதிய உச்சத்தை தொட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொரோனாவிலிருந்து விடுதலை பெற "சமூக முடக்கம்" போன்றவை எக்காலத்திலும் கைகொடுக்கப் போவதில்லை

உலகெங்கும் தற்போதைய கோவிட்-19 தொற்றின் மோசமாக தாக்கத்தால் மக்களும் அரசாங்கங்களும் தடுமாறிக்கொண்டிருக்கும் போது சில நாடுகளில் இந்த நோய்த் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாமல் உள்ளது. இதனால் "சமூக முடக்கம்" போன்றவற்றை விதித்தே மக்களை அவதானமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியுமென்றால், அது எக்காலத்திலும் கைகொடுக்கப் போவதில்லை என்றே பல நாடுகளும் கருதுகின்றன.

இது போன்றே சமூக முடக்கம் என்ற ஆயுதத்தை இலங்கையிலும் அரசாங்கம் உபயோகிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இலங்கையில் கொரோனா நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பொதுமக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என்பதே பொதுவான ஒரு கருத்தாக உள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று என்பது மாதக்கணக்கிலா அல்லது வருடக்கணக்கிலா உலகத்தை விட்டு முற்றாக நீங்குமென்பதை எவருமே வரையறுத்துக் கூறி விட முடியாதிருக்கின்றது. உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த சர்வதேச மருத்துவ நிபுணர்களாலும் அதனை உறுதியாகக் கூறி விட முடியாதிருக்கின்றது.

ஆனால் மருத்துவ அறிவியலை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. உலக வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கும் போது, பலவிதமான வைரஸ்களுக்கு எதிராக தடுப்பூசி மருந்துகள் வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொரோனாவுக்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிப்பில் மருத்துவ உலகம் இன்று ஈட்டியிருக்கும் சாதனை மிகப் பெரியது. இந்த விடயத்தில் முழுமையான வெற்றியை ஈட்டுவதற்கு மேலும் சில காலம் செல்லக் கூடுமென்பதே நம்பிக்கையாகும்.

அதுவரை நாம் ஒவ்வொருவரும் எமது சுயபாதுகாப்பையும், எம்மைச் சுற்றியுள்ளோரின் பாதுகாப்பையும் கவனத்தில் கொண்டு கொரோனா தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதே உகந்ததாகும்.

கொவிட் தொற்று பரவுதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு நாடெங்கும் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருந்து வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமையன்று இரவு பத்து மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த நடைமுறையானது தொடர்ந்து பத்து தினங்களுக்கு அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களை அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பேணியவாறு மிக அவதானமாக நடந்து கொள்ளுமாறும், சமூக இடைவெளியை கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும் மருத்துவ சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாகக் கூறி வந்த போதிலும், மக்களில் ஏராளமானோர் அந்த அறிவுரைகளை உதாசீனம் செய்தவாறே வந்தனர். அரசாங்கத்தின் அறிவிப்பை பொருட்படுத்தாமல் பெருமளவானோர் நடந்து கொண்டனர்.

ஒன்றுகூடல்கள் மற்றும் விழாக்கள் பலரது வீடுகளில் இரகசியமாக நடந்தேறின. வழிபாட்டுத் தலங்கள் சிலவற்றில் சமூக இடைவெளியை மறந்தவாறு பலரும் ஒன்றுகூடி வழிபாடுகளில் ஈடுபட்டனர். பல வீடுகளில் திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள் போன்றவையெல்லாம் நடந்தேறின. முகக்கவசத்தை தாடைக்குக் கீழே இறக்கி விட்டவாறு பலரும் அநாயாசமாக பொது இடங்களில் நடமாடினர். வளிச்சீராக்கி (எயார் கண்டிஷன்) பொருத்தப்பட்ட பொதுப்போக்குவரத்து சாதனங்களில் மக்கள் பயணம் செய்ததைக் காண முடிந்தது.

இவற்றின் விளைவாக நாளாந்தம் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது பல்கிப் பெருகியது. அதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போனது. மருத்துவமனைகளில் கொவிட் தொற்றாளர்களின் அதிகரிப்பு காரணமாக இடநெருக்கடியும் ஏற்பட்டது. வைத்தியசாலைகளில் பணியாற்றிய மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கொரோனா தொற்றுக்கு உள்ளானதால் நிலைமை மோசமடைந்தது. வைத்தியர்கள் ஒருசிலர் உட்பட மருத்துவ சேவையினர் பலர் உயிரிழந்தும் விட்டனர்.

இவ்வாறான பல்வேறு நெருக்கடிகள் அதிகரித்துக் கொண்டு சென்றதன் காரணமாக மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு இப்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்கை அரசாங்கம் கொண்டு வர வேண்டியிருந்தது. நாட்டின் மதத்தலைவர்கள், மருத்துவ சுகாதாரத் துறையினர் மற்றும் பல்வேறான பொதுநல அமைப்புகளின் ஆலோசனையை முன்னிட்டு மக்கள் நடமாட்டத்தையும், ஒன்றுகூடல்களையும் கட்டுப்படுத்துவதன் மூலம் கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே தற்போதைய நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறு பார்க்கும் போது, இலங்கையில் முன்னர் உருவெடுத்த கொவிட் அலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் மிகவும் அவதானமாக செயற்பட்டிருப்பின் இவ்வாறு மீண்டுமொரு அலைக்கு நாடு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. கொரோனா பரவல் இனிமேல் மீண்டும் தலைதூக்கப் போவதில்லையென்ற விவேகமற்ற எண்ணத்தில் மக்களில் ஏராளமானோர் நடந்து கொண்டதன் விளைவாகவே எமது நாடு மீண்டுமொரு அலையை சந்திக்கும் நிலைமை உண்டானது.

கொரோனா கட்டுப்பாட்டுக்கான பிரிவினரும் மருத்துவ சுகாதாரத் துறையினரும் ஊடகங்கள் வாயிலாக எவ்வாறான அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் கூறி வந்த போதிலும், மக்களில் பலர் அதனையெல்லாம் பொருட்படுத்துவதில்லையென்பது நன்றாகவே தெரிந்து விட்டது. அறிவுரைகளாலும், ஆலோசனைகளாலும் பயன் கிடைக்கப் போவதில்லை. "லொக் டவுண்" போன்ற கண்டிப்பான உத்தரவுகள் மூலமாகவே மக்களை கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியுமென்பதுதான் உண்மையானால், அது ஆரோக்கியமானதல்ல.

இலங்கை மக்கள் முதலில் நிலைமையின் பாரதூரத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் என்பது ஒருவரில் இருந்து மற்றவருக்கு எவ்வாறு இலகுவாகப் பரவுகின்றதென்பதை ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்றவாறு ஒவ்வொருவரும் தம்மையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறான பொறுப்புணர்வான செயற்பாடுகளின் ஊடாகவே கொரோனா பெருந்தொற்றில் இருந்து நம்மால் மீண்டெழ முடியும் என்பதையே நாம் இந்த நேரத்தில் குறிப்பிட முடியும்.

**- கொழும்பிலிருந்து ராஜபுத்ரன்**

# இலங்கையின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர காலமானார்



இலங்கையின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவருமான மங்கள சமரவீர கொவிட்-19 தொற்றுக்கு உள்ளான நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது செவ்வாய்க்கிழமை (24) மரணமடைந்துள்ளார்.

1956 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பிறந்த அவர், மரணிக்கும் போது வயது 65 ஆகும்.

கடந்த ஓகஸ்ட் 12 ஆம் திகதி மேற்கொண்ட PCR பரிசோதனையில் அவருக்கு கொவிட்-19 தொற்று இருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 12 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அவர், உடல் நலம் தேறி வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் சமூக வலைத்தளங்களில் அவர் மரணமடைந்ததாக ஒரு சில தினங்களுக்கு முன்னர் வதந்தி பரவி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடவிருந்த அவர், தான் அரசியலிலிருந்து விலகுவதாக அறிவித்து தேர்தலிலிருந்து போட்டியிடுவதிலிருந்தும் தவிர்ந்து கொண்டார்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் வெளிவிவகார அமைச்சராகவும் (2015-2017) அதனைத் தொடர்ந்து நிதி அமைச்சராகவும் (2017-2019) பதவி வகித்திருந்ததோடு, அதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் காலத்திலும் பல்வேறு அமைச்சு பதவிகளை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்ற அவர், இலண்டனிலுள்ள St. Martin's School of Art இல் துணி வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் BA பட்டத்தை பெற்றார்.

மங்கள சமரவீர 1989 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 18 ஆயிரத்து 76 குடும்பங்களுக்கு 36 மில்லியன் இடர்கால நிதிக் கொடுப்பனவு வழங்கி வைப்பு!

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு முதல் கட்டமாக விடுவிக்கப்பட்ட 36 மில்லியன் ரூபாய் நிதியில் 18 ஆயிரத்து 76 குடும்பங்களுக்கு இடர்கால நிதிக் கொடுப்பனவு இன்றுடன் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர், க.மகேசன் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட நிதி நாளை விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் வருமானமிழந்த ஏனைய குடும்பங்களுக்கும் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 10 நாள்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக வருமானத்தை இழந்துள்ள அரசின் எந்தவொரு கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு 36 ஆயிரம் குடும்பங்கள் தகுதி பெற்றன. அதற்காக 72 மில்லியன் ரூபாய் நிதி அரசிடம் கோரப்பட்டிருந்தது.

அதில் முதல் கட்டமாக 36 மில்லியன் ரூபாய் நிதி கிடைத்தது. இன்று வரை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவிலும் 18 ஆயிரத்து 706 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவ வழங்கப்பட்டுள்ளது. என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர், க. மகேசன் தெரிவித்தார்.

(26-8-2021)





# வைரசுக்கு எதிரான போரில் வெற்றி பெறாத ராணுவம்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த வெள்ளிக்கிழமை அரசாங்கம் பெரும்பாலும் சமூக முடக்கத்தை அறிவிக்கலாம் என்று ஒரு எதிர்பார்ப்பு ஊடகங்களைத் தொடர்ச்சியாக வாசிப்பவர்கள் மத்தியில் இருந்தது. எனினும் பெரும்பாலான சனங்கள் அதற்கு தயாராக இருக்கவில்லை என்பதைத்தான் வெள்ளி பின்னேரம் நமக்கு உணர்த்தியது. நாட்டின் பெரும்பாலான நகரங்கள் வழமைக்கு மாறாக ஜனங்களால் பிதுங்கி வழிந்தன. குறிப்பாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள்: பல்பொருள் அங்காடிகள்; மருந்தகங்கள்: போன்ற இடங்களில் ஜனங்கள் நெரிசலாக காணப்பட்டார்கள். தெருக்களில் திருவிழாக் காலத்தைப் போல பண்டிகை நாட்களைப் போல சனங்கள் அடர்த்தியாகக் காணப்பட்டார்கள். வணிகர்கள் பொருட்களின் விலையை பன்மடங்காக கூட்டிவிற்றார்கள். எந்த நோக்கத்திற்காக சமூகம் முடக்கப்படுகிறது? வைரஸ் தொற்றும் வேகத்தை குறைப்பதற்காகத்தானே? ஆனால் பத்து நாட்களுக்குள் ஏற்படக்கூடிய தொற்றை சில மணித்தியாலங்களுக்குள் ஏற்படுத்தியமைதான் திடீர் அறிவிப்புகளின் விளைவு எனலாமா?

அரசாங்கம் தந்திரமாக பழியை எதிர்க்கட்சிகளின் மீதும் தொழிற்சங்கங்களின் மீதும் போடப் பார்க்கிறது. கொரோனா தொற்று பரவி மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்கு ஜோசப் ஸ்டாலின்கொத்தணி, சஜித் கொத்தணி மற்றும் அனுர கொத்தணி போன்றவையே காரணம் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஆனால் திடீர் சமூக முடக்க அறிவிப்பால் நாட்டில் பெட்ரோல் செட் கொத்தணி; ஃபூட் சிற்றி கொத்தணி; பார்மசி கொத்தணி போன்ற கொத்தணிகள் வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அதிரடி அறிவிப்புகள் அல்லது எதிர்பாரா அறிவிப்புகள் எனப்படுபவை சிவில்தனமானவை அல்ல. அவை அதிரடியான ராணுவத்தன்மைமிக்க அறிவிப்புகள். இதற்கு முன்னரும் அரசாங்கம் அவ்வாறு ராணுவத்தனமாகத்தான் சமூகமுடக்கங்களை அறிவித்திருக்கிறது. இவ்வாறு திடீரென்று அறிவிக்கப்படும்போது மக்கள் கூடியபட்ஷம் பொருட்களை வாங்கிச் சேமிக்க தொடங்குவார்கள். குடிமக்களின் உளவியல் என்பது அதுதான். குடிமக்களுக்கும் ராணுவத்துக்கும் இடையே உள்ள வேறுபாடும் அதுதான். குடிமக்கள் இவ்வாறான அறிவிப்புக்கள் வரும்பொழுது விழுந்தடித்துக்கொண்டு கடைகளுக்கு ஓடுவார்கள். வாங்ககூடிய பொருட்களை வாங்கிச் சேமிக்கப் பார்ப்பார்கள். எனவே குடிமக்களின் இயல்பை சரியாக விளங்கிக் கொள்ளாமல் சமூக முடக்கங்களை திடீரென்று அறிவித்தால் அவை எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்ட சமூகமுடக்கமும் அத்தகையதுதான்.

அப்படி ஒரு சமூகமுடக்கம் விரைவில் அறிவிக்கப்படும் என்று சில நாட்களுக்கு முன்னரே முன்னெச்சரிக்கை காட்டியிருந்தால் ஜனங்கள் படிப்படியாக பொருட்களை வாங்கியிருப்பார்கள். ஒரு நாளின் மிகச்சில மணித்தியாலங்களுக்குள் விழுந்தடித்துக் கொண்டு கடைகளுக்கு ஒடியிருக்கமாட்டார்கள். அவ்வாறு முன்கூட்டியே முடிவெடுத்து முன்கூட்டியே ஜனங்களை முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி அறிவித்திருக்கலாம்தானே. சமூக முடக்கத்தை ராணுவ நடவடிக்கை போல ஏன் திடீரென்று அறிவிக்க வேண்டும்? ஜனாதிபதி வெள்ளிக்கிழமை இரவு ஆற்றிய உரையை சில நாட்களுக்கு முன்னரே செய்திருக்கலாம். சனங்களை ஒரு சமூகம் முடக்கத்துக்கு தயாராகுமாறு முன்கூட்டியே எச்சரித்திருக்கலாம். ஆனால் அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை. முன்கூட்டியே அறிவித்தால் வைரஸ் ஓடி ஒழித்து விடும் என்று அரசாங்கம் அஞ்சியதா?

இது எதைக் காட்டுகிறது? அரசாங்கம் முடிவெடுக்க முடியாமல் திணறுவதை காட்டுகிறதா? அப்படி என்றால் இந்த அரசாங்கத்தில் இருப்பவர்கள்தானே கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்கு முன்பு யுத்தம் தொடர்பில் முடிவுகளை எடுத்தார்கள்? அந்த முடிவுகளுக்கும் இப்போது எடுக்கப்படும் முடிவுகளுக்கு இடையில் என்ன வேறுபாடு உண்டு?

ஆம் அவர்கள் அப்பொழுது எடுத்த முடிவும் பிழையான முடிவுதான். யுத்தத்தின் வெற்றிக்காக தமது குடிமக்களில் ஒரு பகுதியினரின் உயிர்களை பொருட்படுத்துவதில்லை என்று முடிவெடுப்பது ஒரு மகத்தான முடிவு அல்ல. அப்படி ஒரு முடிவை எடுத்து யுத்தத்தை வெல்வது ஒரு பெரிய காரியமும் அல்ல. அதாவது ஒரு இனப்படுகொலை மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பெரிய வீரம் தேவையில்லை. அதுமட்டுமல்ல போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களின் இழப்புக்களை தடுப்பதற்கு இந்தியாவோ அல்லது ஐநாவோ பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இறுதிக்கட்ட போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு அதுவும் ஒரு காரணம். அதாவது போரில் அரசாங்கம் வென்றதற்கு அதுவுமொரு காரணம்தான்.

எனவே அரசாங்கம் முடிவெடுக்க முடியாமல் தடுமாறுகிறது என்பதே உண்மை. யுத்தத்தைப்போல வைரஸை கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை வந்துவிட்டது. வைரசுக்கு எதிரான போரில் படைத்தரப்பு எதிர்பார்த்த வெற்றியை எதிர்பார்த்த வேகத்தில் பெறமுடியவில்லை. சரிந்து விழும் பொருளாதாரத்திற்கும் வைரசுக்குமிடையே நாடு தடுமாறுகிறது.துறைசார் நிபுணர்களும் எதிர்க்கட்சிகளும் எத்தனையோ தடவை கேட்டபோதும் அரசாங்கம் சமூகமுடக்கத்தை அறிவிக்கத் தயாராக இருக்கவில்லை. முடிவில் இரண்டு மகாநாயக்கர் கேட்ட பின்னர்தான் அரசாங்கம் அந்த முடிவை எடுத்தது. அப்படி என்றால் நாட்டில் துறைசார் நிபுணர்களை விடவும் மகாநாயக்கர்கள் கூறுவதைத்தான் அரசாங்கம் கேட்கிறதா?

சமூகமுடக்கம் அறிவிக்கப்பட்ட அன்றிரவு ஜனாதிபதி தொலைக்காட்சிகளில் தோன்றி உரையாற்றினார். இந்த உரையின் பெரும் பகுதியில் அவர் ஏன் சமூக முடக்கத்தை அரசாங்கம் விரும்பவில்லை என்பதற்கான விளக்கத்தை வழங்கினார். பொருளாதார நோக்குநிலையில் இருந்து அவர் கூறுவதில் நியாயம் உண்டு. வைரஸை முடக்குவது என்றால் அதற்கு நாட்டை முடக்க வேண்டும். ஆனால் நாட்டை முடக்கினால் பொருளாதாரம் முடங்கிவிடும். அதனால்தான் அரசாங்கம் சமூகமுடக்கம் தொடர்பில் முடிவெடுக்காமல் ஒத்தி வைத்துக்கொண்டே வந்தது. இதை இன்னொரு விதமாகக் கூறின் இழப்புக்களை பற்றிப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் பொருளாதாரத்தை எப்படித் தூக்கி நிறுத்தலாம் என்றே சிந்தித்தது. அதுவும் ஒரு யுத்தகளச் சிந்தனைதான்.

மேலும் பொருளாதார நோக்கு நிலையிலிருந்து சில துறைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டன. இது ஜனங்கள் சமூக முடக்கத்தை மீறி நடமாடுவதற்குரிய வாய்ப்புகளை அதிகப்படுத்தி இருக்கிறது. பிரதான சாலைகளில்தான் ஓரளவுக்கு சமூகம் முடங்கியிருக்கிறது. ஆனால் குக்கிராமங்களில் வாழ்க்கை வழமைபோல இயங்குகிறது. சமூகம் முடங்கவில்லை. வணிகர்கள் கடைகளின் முன் கதவை பூட்டி விட்டு பின்கதவால் வியாபாரத்தை செய்கிறார்கள். அப்படி என்றால் வைரஸ் பெருஞ் சாலைகளின் வழியாகத்தான் வருமா? பின்கதவு வழியாகத்தான் வருமா?

அதேசமயம், இப்போதும் அறிவிக்கப்பட்ட காலஎல்லை முடிந்ததும் சமூகமுடக்கம் நீக்கப்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில் முன்னைய சமூக முடக்கங்கள் அப்படித்தான் தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டன. அதாவது அரசாங்கம் தான் என்ன செய்யப்போகிறது என்பதை வெளிப்படையாக மக்களுக்கு கூறத் தயங்குகிறது. இது ஒரு குடிமக்கள் சமூகத்திற்கு உரிய பண்பு அல்ல. படைத்துறை மற்றும் புலனாய்வுத்துறை பண்புதான். அதன் விளைவாகத்தான் குடி மக்களின் நோக்கு நிலையில் இருந்து சிவில் தனமாக சமூக முடக்கத்தை அறிவித்த தவறியது. எல்லாவற்றையும் ராணுவத்தனமாகவே முன்னெடுக்கிறது. போரில் வெற்றிபெற்ற ஒரு படைத் தரப்பை வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னிறுத்தி அதையும் ஒரு போராக காட்டி அதன் மூலம் பின்வரும் விடயங்களை சாதிக்கலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டது.

முதலாவதாக அரசாங்கம் எதையும் படைத்தரப்புக்கூடாகத்தான் சிந்திக்க முடியும். அது தவிர்க்கப்பட முடியாத ஒரு ராஜபக்ச யதார்த்தம். போர் வெற்றிகள்தான் ராஜபக்சக்களின் அரசியல் முதலீடு. போர் வெற்றிகளை முதலீடாக கொண்ட ஒரு குடும்ப ஆட்சியானது படைத்தரப்பில் இருந்து பிரிக்கப்பட்டவியலாத இறுக்கமான ஒரு உறவைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக போர்க்குற்றச்சாட்டுக்கு இலக்காகும் ஓர் அரசாங்கம் இது விடயத்தில் படைத் தரப்பை பாதுகாத்தால்தான் தன்னையும் பாதுகாக்கலாம் என்ற தர்க்கத்தின்படி படைத் தரப்பை எப்படி தண்டிக்கப்பட முடியாத ஒரு தரப்பாக, மகிமைக்குரிய ஒரு தரப்பாக மேலுயர்த்தலாம் என்றுதான் சிந்திக்கும். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அதைத்தான் அரசாங்கம் செய்து வருகிறது.

அரச உபகரணங்களில் ராஜபக்ஷக்களுக்கு அதிகம் நம்பிக்கைக்குரிய ஒரு உபகரணம் படைத்தரப்புதான். Covid-19 சூழலை முன்வைத்து நாட்டை அதிகபட்சம் ராணுவமயடுத்தியதோடு Covid-19 எதிரான செயலணியின் தலைவராகவும் படைத்தளபதியே நியமிக்கப்பட்டிருக்கிறார். வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒரு போரைப்போல காட்டி அதில் படைத்தரப்பு வெல்லும் பொழுது அதன் மகிமை மேலும் உயரும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. இது காரணமாக வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் மருத்துவத்துறையைவிடவும் படைத்தரப்பின் கையே மேலோங்கி காணப்படுகிறது. நாட்டுமக்கள் மூன்றாவது தடுப்பூசியை அதாவது பூஸ்டர் டோஸை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனையும் சில நாட்களுக்கு முன் படைத்தளபதியே அறிவித்திருந்தார்.

மேலும் பெருந்தொற்று நோய்க்கு எதிரான நடவடிக்கைகளில் படைத்தரப்பே முன்னணியில் நின்றபடியால் அதுகுறித்த விமர்சனங்களை முன்வைப்பதற்கு எதிர்கட்சிகளும் சிங்களக் கூட்டு உளவியலும் ஓரளவுக்கு தயங்கின. உயிரைக் கொடுத்து போரை வென்று கொடுத்த ஒரு படைத்தரப்பு வைரசுக்கு எதிராகவும் ரிஸ்க் எடுத்து போராடிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் படைத்தரப்பின் மீது விமர்சனங்களை வைப்பதற்கு எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் ஓரளவுக்கு தயங்கின. சிங்களப் பொது உளவியலும் இது விடயத்தில் படைத்தரப்பு விமர்சிப்பதற்கு தயாராக இருக்கவில்லை. இது அரசாங்கத்தை குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதுகாத்தது. வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிப்பது என்பது அதில் முன்னணி செயற்பாட்டாளர்களாகக் காணப்படும் படைத்தரப்பையும் விமர்சிப்பதுதான். தமது யுத்தவெற்றி நாயகர்களை விமர்சிக்க தயங்கிய சிங்களக் கூட்டு உளவியலை அரசாங்கம் நன்கு பயன்படுத்தியது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக துணிச்சலுடன் போராடி தியாகம் புரிந்து வெற்றி பெற்ற ஒரு படைத்தரப்பு இப்பொழுது வைரசுக்கு எதிராகவும் துணிச்சலாகப் போராடி தியாகங்களை புரிகிறது என்ற ஒரு பிம்பத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால் ஒன்றரை ஆண்டுகால அனுபவம் அந்த எதிர்பார்ப்பை தோற்கடித்து விட்டதா? வைரசுக்கு எதிரான போரில் படைத்தரப்பு வெற்றி பெறத் தவறிவிட்டதா? இதை இன்னும் ஆழமாக சொன்னால் யுத்த வெற்றிகளின் பளபளப்பின்மீது வைரஸ் பரவத் தொடங்கிவிட்டதா?

பாசத்தைக்காட்டி
பன்னீர் தெளித்து
உருண்டு பிரண்டு
அன்பு காட்டுவதை விட,
சில உறவுகளுடன்
தாமரையிலை நீர் போல்
ஒட்டாமல் ஒட்டி
வாழ்ந்திடுவது
அனைவருக்கும் சிறப்பு!!!

வீணாவின் கவிக்கணை

கனடிய செய்திகள்
Canadian News

# தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்த்தானின் எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றது

ஆயுதம் தாங்கிய மதவாதிகளான தலிபான்களிடம் ஆட்சி அதிகாரம் சென்று விட்ட ஆப்கானிஸ்தானில் காபூல் விமானநிலையத்திற்கு அருகில் நாட்டை விட்டு வெளியேற பெரும் கூட்டம் திரண்ட நிலையில் அங்கு ஏற்பட்ட பதற்ற சூழலில் குறைந்தது ஏழு பேர் உயிரிழந்திருப்பதாக பிரிட்டிஷ் இராணுவம் தெரிவித்துள்ளது. மக்கள் விமான நிலையங்களை நோக்கி முண்டியடித்துச் செல்வதாலும் தலிபான்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருப்பதாலும் இவ்வாறு அப்பாவிகள் மரணமடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் நால்வர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே மேலும் பலர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வாரத்திற்கு முன் தலிபான்கள் ஆப்கானை கைப்பற்றியதை அடுத்தே நாட்டை விட்டு வெளியேறும் முயற்சியில் காபூல் விமானநிலையத்தில் பலரும் திரண்டு வருகின்றனர். இங்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட சர்வதேச நாடுகள் தமது மக்களை ஆப்கானை விட்டு வெளியேற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஆப்கான் விமானநிலையத்திற்கு வெளியே மக்கள் நெரிசலில் சிக்கி மிதிபட்டு காயத்துக்குள்ளான பல சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

இந்நிலையில் காபூல் விமான நிலையத்தில் ஆப்கானிஸ்தானில் இருக்கும் ஐ.எஸ் அமைப்பால் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில், அமெரிக்க மக்கள் காபூல் விமான நிலையத்துக்கு வர வேண்டாம் என எச்சரித்துள்ளது அமெரிக்கா.

காபூல் விமான நிலையத்துக்கு வெளியே பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பதால், அங்கு வர வேண்டாம் என அமெரிக்கா சனிக்கிழமையே எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அரசு தரப்பிலிருந்து, பயணம் மேற்கொள்ளுமாறு கூறுபவர்கள் மட்டும் காபூல் வந்தால் போதும் எனக் கூறியுள்ளது அமெரிக்கா.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் ஆப்கானின் சூழலை கண்காணித்து வருவதாகவும், மாற்று வழிகளை குறித்து ஆலோசித்து வருவதாகவும் கூறியுள்ளனர்.

காபூல் விமானநிலையத்தில் இருந்து இதுவரை சுமார் 2,500 அமெரிக்க பிரஜைகள் உட்பட 17,000 பேர் வரை வெளியேற்றப்பட்டிருப்பதாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்தது.

ஆப்கானில் இருந்து வெளியேற வரும் அமெரிக்கர்கள் மற்றும் ஆப்கானியர்கள் தொந்தரவுகளுக்கு முகம்கொடுப்பதாகவும் சிலர் தாக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காபூல் விமானநிலையத்தில் தற்போதைய பதற்ற சூழல் பற்றி ஏனைய நாடுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன. இதேவேளை, ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில், தலிபான் படையினர் ஒழுங்குமுறையைக் கொண்டுவந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காபூல் விமான நிலையத்திற்கு வெளியே உள்ள நுழைவாயில்களில் மக்கள் வரிசையாக நிற்கவும் அவர்கள் கூட்டம் கூடாமல் இருக்கவும், தலிபான்கள் ஏற்பாடு செய்துள்ளதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

காபூல் விமான நிலையத்தில் குழப்பமான சூழல் நிலவுவதாகக் கூறப்படும் நிலையில், அதைக் கட்டுப்படுத்த தலிபான்கள் நடவடிக்கை எடுக்கத் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த திங்கள் காலை முதல் விமான நிலையத்தில், வன்முறையோ குழப்பமோ இல்லை என்று நேரில் பார்த்தவர்கள் கூறினர். இருப்பினும், நிலைமை எப்போது வேண்டுமானாலும் மோசமாகலாம் என்று கூறிய தலிபான் அதிகாரி ஒருவர், நாட்டைவிட்டு வெளியேற விரும்புவோர் சுமுகமாய் வெளியேறத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

காபூல் விமானநிலையம் தற்போது அமெரிக்க படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தப் படை அமெரிக்க பிரஜைகள் மற்றும் ஏனைய நாட்டு பிரஜைகள் ஆப்கானில் இருந்து வெளியேற உதவி வருகிறது. இதில் தலிபான்களின் ஆட்சியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும் வெளிநாட்டினருக்காக வேலை பார்த்த ஆப்கானியர்களும் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

எனினும் அமெரிக்க துருப்புகள் ஆப்கானில் இருந்து வெளியேறுவதற்கான காலக்கெடு வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. அதன் பின்னர் என்ன நிகழும் என்பது உறுதி இல்லாமல் உள்ளது.

இதனிடையே ஆப்கானில் தமது கட்டுப்பாட்டை வலுப்படுத்த தலிபான்கள் தொடர்ந்து முயன்று வருகின்றனர். தலிபான் இணை நிறுவனரான முல்லா அப்துல் கானி பரதர் தற்போது காபூல் நகரில் இருப்பதோடு புதிய அரசு ஒன்றை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

ஆப்கானில் இருக்கும் மூத்த தலிபான் உறுப்பினராக அவர் இருப்பதோடு தலிபான் தலைமையில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் அரசில் முக்கிய புள்ளியாக அவர் இருக்க வாய்ப்பு உள்ளது.


அடுத்த சில வாரங்களில் ஆப்கானின் புதிய அரசின் வடிவம் வெளியிடப்படும் என்று தலிபான் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

அது மேற்குலகில் இருப்பது போன்ற ஜனநாயக வடிவத்தில் இருக்காது என்றும் ஆனால் அனைவரினதும் உரிமை பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**- கவிலேஸ்வரன் (கனடா)**

உலக செய்திகள்
World News

# தற்போது ஜேர்மனியில் பீட்சா விநியோகம் செய்பவராக வேலை செய்யும் ஆப்கானிஸ்த்தான் நாட்டின் முன்னாள் அமைச்சர்



தற்போது ஜேர்மனியில் பீட்சா விநியோகம் செய்பவராக வேலை செய்யும் ஆப்கானிஸ்த்தான் நாட்டின் முன்னாள் அமைச்சர் ஒருவர் பற்றிய செய்தி பரவலாக வாசகர்களால் ஆர்வத்துடன் வாசிக்கப்படுகின்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

சையத் அஹமட் ஷா சதத் என்னும் பெயருடைய இவர் 2018ம் ஆண்டு ஆப்கானிஸ்த்தானில் தகவல் தொழில்நுட்பம் மற்றம் தொடர்புத்துறை அமைச்சராக பதவி வகித்தவர் என்றும் தற்போது ஜேர்மனி நாட்டில் லீப்சிக் நகரில் வசித்து வருவதாக அறியப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்த்தான் நாட்டில் கடந்த அஷ்ரப் கானி தலைமையிலான அரசாங்கத்தில் பதவி வகித்து 2020ல் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஜேர்மனிக்கு குடிபெயர்ந்து தனத வாழ்வாதாரத்திற்காக பீட்சா உணவு விநியோகம் செய்பவராக இருந்து வருகின்றார் என்ற அறியப்படுகின்றது.

இங்கு காணப்படும் படங்கள் மேற்படி சையத் அஹமட் ஷா சதத் அவர்களால் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கப்பெற்றவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆண் பெண் மாணவர்கள் ஒரே வகுப்பறையில் கல்விகற்பது கொடிய சமூகத்தின் பின்னணியைக் கொண்டது என்கிறார்கள் தலிபான்கள்


தலிபான்களின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் சென்றுள்ள ஆப்கானிஸ்த்தானின் ஹெரத் மாகாணத்தில் நடைபெற்ற கல்வி சார்ந்த நிறுவனங்களின் சந்திப்பில் தலிபான்கள் சார்பில் பங்கேற்ற ஆப்கான் இஸ்லாமிய எமிரேட்ஸின் உயர் கல்வித் தலைவர் முல்லா பரீத், பல்கலைக் கழகங்களிலோ அன்றி உயர் கல்லூரிகளிலோ ஆண் மாணவர்கள் மற்றும் பெண் மாணவர்கள் ஆகியோர் ஒரே வகுப்பறையில் இணைந்து கல்விகற்கும் முறை கொடிய சமூகத்தின் பின்னணியைக் கொண்டது என்பதால் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியை பிடித்து ஒரு வாரம் கடந்த நிலையில் ஹெரத் மாகாணத்தில் உள்ள அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் ஆண்களும் பெண்களும் ஒரே வகுப்பறையில் இருப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

தலிபான் அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தனியார் பல்கலைக்கழக உரிமையாளர்கள் இடையே மூன்று மணி நேரம் இடம்பெற்ற சந்திப்பில், இணைந்து கற்பதைத் தொடர்வதினை நியாயப்படுத்த முடியது என்றும் அது முடிக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதாக காமா பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



# கலைமாமணி மதுரை இராமச்சந்திரன் முரளிதரனின் நெறியாள்கயில் நடைபெற்ற நடன நிகழ்வு கிழக்கிலங்கையிருந்து மாத்திரம் 45 கலைஞர்கள் பங்கெடுத்தனர்



உலகெங்கிலுமிருந்து விரிவரங்க நிகழ்நிலையில் 850 நடனக் கலைஞர்கள் பங்கேற்ற மாபெரும் நடன நிகழ்வு உலக கின்னஸ் சாதனைப்பட்டியலில் இடம்பிடித்துள்ளது. இந்த நிகழ்வில் உலகின் பல நாடுகளிலிருந்தும் நடனக் கலைஞர்கள் பங்கெடுத்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற நடனக் கலைஞரான கலைமாமணி மதுரை இராமச்சந்திரன் முரளிதரனின் நெறியாள்கையின்கீழ் அண்மையில் இணையவழி ஊடாக இந்நடன நிகழ்வு கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்தது. ஏற்கனவே பல கின்னஸ் சாதனைகளை மதுரை இராமச்சந்திரன் முரளிதரன் நிகழ்த்தியிருந்தார். கொவிட் நிதிக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் கொரோனா அசாதாரண காலகட்டத்தில் விரிவரங்க நிகழ்நிலை ஊடாக இந்தியாவைச் சேர்ந்த கலைமாமணி மதுரை இராமச்சந்திரன் முரளிதரன் நெறியாள்கையின் கீழ் பல நாடுகளிலுமிருந்து 850 கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

அது உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் பதியப்பட்டது. இந்த உலக சாதனை நிகழ்வில் தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளரும், செயற்திட்ட தலைவருமான முனைவர் திருமதி. நிசாந்தராகினி திருக்குமரனின் ஒருங்கிணைத்தலின் கீழ் இலங்கையிலிருந்து 67 கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர். கிழக்கிலங்கையிருந்து மாத்திரம் 45 கலைஞர்கள் பங்குபற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவைச் சேர்ந்த மாணவி செல்வி ஜெயகோபன் தக்சாளினி என்பவரும் பங்குபற்றி சாதனைச் சான்றிதழைப் பெற்று காரைதீவு மண்ணுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். எம்நாட்டின் சாதனைக் கலைஞர்களைப் பெருமையுடன் பலரும் பாராட்டி மகிழ்கிறார்கள்.



# வலிந்து காணமலாக்கப்பட்டோரின் அனைத்துலக நாளை முன்னிட்டு கனடாவில் நடத்தப் பெறும் நீதிக்கான நடைபயணம்

## "2009 இன அழிப்பின் மூலோபாயமே வலிந்து காணாமலாக்கப்படுதல்"

திகதி: ஆகஸ்ட் 30, 2021 திங்கட்கிழமை
வலிந்து காணமலாக்கப்பட்டோரின் அனைத்துலக நாளை முன்னிட்டு நடத்தப்பெறும் நீதிக்கான நடைபயணம்
29.08.21 ஞாயிறு காலை 8:00 மணிக்கு ஆரம்பிக்கும்

இடம்: Chinguacousy Park
9050 Bramalea Road (Central Park & Queens Street East)

30.08.2021 இல் மதியம் நிறைவு பெறும்
இடம்: QUEEN'S PARK
110 Wellesley St. W, Toronto, ON M7A 1A2

அன்புடையீர்,

தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்திக் கொண்டிருக்கும் தொடர் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கு முகமாக கனடாவின் தமிழர் மனித உரிமைகளுக்கான கண்காணிப்புச் சமூகம் ஏற்பாடு செய்திருக்கும் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அமைப்புகள், ஊர்ச்சங்கங்கள், மாணவர் சங்கங்கங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. இதற்கு ஆதரவாக கனடா தமிழ் அமைப்புக்களின் நீதிக்கான கூட்டமைப்பு தார்மீக ஆதரவை வழங்கி நிற்கின்றது.




இங்ஙனம்,

கனடா தமிழ் அமைப்புக்களின் நீதிக்கான கூட்டமைப்பு
சார்பாக
உண்மையுள்ள
முரளீதரன் கந்தசுவாமி
(416) 731-4953






# காபூல் விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் பலி

**(உதயன் அலுவலகச் செய்தியாளர்கள்)**

தலிபான் ஆயுததாரிகள் கைகளுக்குள் ஆட்சி அதிகாரம் சென்றிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டின் காபூல் விமான நிலையத்தை 26ம் திகதி வியாழக்கிழமை திரண்டு சென்று கொண்டிருந்த ஆப்கானிஸ்தான் மக்கள் கூட்டத்தை தாக்கும் வகையில் இரண்டு தற்கொலை குண்டுதாரிகள்கள் மற்றும் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்களை நடத்தியதில், குறைந்தது 60 ஆப்கானியர்களும் 12 அமெரிக்க துருப்புக்களும் கொல்லப்பட்டதாக ஆப்கான் மற்றும் அமெரிக்க இராணுவப் பிரிவு ஆகியன விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை அமெரிக்காவையும் மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த தாக்குதலுக்கு ஐஸஸ் என்னும் பயங்கரவாத இயக்கம் உரிமை கோரியிருந்தாலும், தலிபான்களோடு பகைமை உணர்வு கொண்டுள்ள இந்த அமைப்பு எவ்வாறு காபூல் விமான நிலையத்திற்கு அருகில் தாக்குதல்களை நடத்த முடிந்தது என்ற கேள்வியை சர்வதேச ஊடகவியலாளர்கள் எழுப்பியுள்ளனர்.



இதேவேளை காபூல் விமான நிலையத்தை விட்டு வெளியேறுமாறு மக்களை வலியுறுத்தி, பெரும் தாக்குதல் நடத்தப்படும் என்று மேற்கத்திய அதிகாரிகள் எச்சரித்த சில மணிநேரங்களுக்குப் பிறகு இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்தது என்றும் ஆனால் அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக அறிவித்த ஆகஸ்ட் 31 ஆம் திகதி தனது 20 ஆண்டு காலத்தை முடித்து தனது படையினரை வாபஸ் வாங்கிக் கொள்வது என்ற, அமெரிக்க தலைமையிலான வெளியேற்றத்தின் கடைசி நாட்களில் ஆப்கானியர்கள் அந்த ஆலோசனையை பெரிதும் கவனிக்கவில்லை என்பதே தற்போது அவர்கள் கவலைப்படுகின்ற ஒரு விடயமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

ஐஸல் என்ற பயங்கரவாதக் குழு அதன் அமாக் செய்தி சேனலில் நேற்றைய தாக்குதல்களுக்கும் படுகொலைகளுக்கு பொறுப்பேற்றது. ஆப்கானிஸ்தானில் உள்ள ஐஸஸ் அமைப்பு தலிபான்களை விட மிகவும் தீவிரமானது, என்பதும் சமீபத்தில் ஒரு மின்னல் மின்னலில் நாட்டின் கட்டுப்பாட்டை எடுத்துள்ள தலிபான்கள் அமைப்பு இந்த குண்டுவெடிப்புகளைக் கண்டித்துள்ளதும் இங்கு முக்கியமானவையாகும்.

வெள்ளை மாளிகையில் இருந்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆற்றிய தனது கோபமும் உணர்ச்சிபூர்வமானதுமான உரையில், ஆப்கானிஸ்தானில் இருந்து திட்டமிட்டதை விட முன்னதாக தாக்குதல்கள் அமெரிக்காவை வெளியேற்றாது என்று கூறினார் மற்றும் பொறுப்பானவர்களின் விளைவுகள் குறித்தும் எச்சரித்தார் அவர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில், "நாங்கள் மன்னிக்க மாட்டோம். நாங்கள் மறக்க மாட்டோம். நாங்கள் உங்களை வேட்டையாடி நீங்கள் செய்த கொடுஞ்செயலுக்கு விலை கொடுக்கும் படி நிச்சயம் செய்வோம்'' என்று பிடன் கூறினார்.

உயிரிழந்தவர்களில் 11 கடற்படை வீரர்களும் ஒரு கடற்படை மருத்துவரும் அடங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 15 சேவை உறுப்பினர்கள் காயமடைந்ததாக ஆப்கானிஸ் படையினரின் தளபதி மெக்கன்சி கூறினார். இதே வேளையில் 140 க்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்த்தான் பொது மக்கள் காயமடைந்ததாக ஆப்கானிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் மருத்துவமனைகளை நடத்திவரும் ஒரு இத்தாலிய தொண்டு நிறுவனமான எமர்ஜென்சி, விமான நிலைய தாக்குதலில் குறைந்தது 60 பேர் காயமடைந்ததாகவும், அவர்களில் 10 பேர் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் தொண்டு நிறுவனத்தின் மேலாளர் மார்கோ புன்டின், "அறுவை சிகிச்சை நிபுணர்கள் இரவில் வேலை செய்கின்றார்கள் என்றும் காயமடைந்தவர்கள் முதுகெலும்புப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் செய்தியாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வியாழக்கிழமை இடம்பெற்ற தாக்குதல்களை தலிபான்கள் வேண்டுமென்றே அனுமதித்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றாலும், தலிபான்கள் மக்களை வாயில்களுக்கு வெளியே தடுத்ததால் இந்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றதாகவும் கூறினார். இதேவேலை தலிபான் தளபதிகளை விமான நிலையத்தின் சுற்றுவட்டாரத்தில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அமெரிக்கா இராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது என்றும் எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த தாக்குதல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் இரண்டாவது குண்டுவெடிப்புத்தான் மிகவும் மோசமானதாக இருந்ததாகவும் காபுல் நகரத்தின் அருகே உள்ள பரோன் ஹோட்டலில் அல்லது அதற்கு அருகில் இருந்தது, அங்கு ஆப்கானிஸ்தான், பிரித்தானியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் உட்பட பலர் வெளியேற விமான நிலையத்திற்குச் செல்வதற்கு வசதியாக சில நாட்களுக்கு முன்பே அங்கு வந்து தங்கினார்கள் என்றும், ஆப்கானிஸ்தானில் ஒரு விலங்கு தங்குமிடம் நடத்தும் முன்னாள் ராயல் மரைன், விமான நிலையத்திற்கு அருகில் நடந்த குண்டுவெடிப்பின் விளைவாக அவரும் அவரது ஊழியர்களும் சிக்கியதாகக் கூறுகிறார்கள்.

.:.பார்த்திங் தனது ந ழேறசாத் தொண்டு நிறுவனத்தை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்ற முயன்றார். அவர் தப்பி ஓட முயற்சிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவர். கடந்த வாரத்தில், விமான நிலையம் அமெரிக்காவின் மிக நீண்ட யுத்தத்தின் குழப்பமான முடிவு மற்றும் தலிபான்கள் கையகப்படுத்துதல், விமானம் பறந்த பிறகு விமானம் புறப்பட்டுச் செல்வது போன்ற சில காட்சிகளைக் கொண்டிருந்தது.

தலிபான் ஆயுததாரிகள் ஆப்கானிஸ்த்தானில் மிருகத்தனமான ஆட்சிக்கு திரும்புவார்கள் என்று அஞ்சும் பொது மக்கள், தலிபான்கள் கடைசியாக ஆட்சியில் இருந்தபோது, அவர்கள் பெரும்பாலும் பெண்களை தங்கள் வீட்டிலேயே அடைத்து வைத்து கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தனர்.



ஏற்கனவே, சில நாடுகள் தங்கள் வெளியேற்றங்களை முடித்து, தங்கள் வீரர்கள் மற்றும் இராஜதந்திரிகளை திரும்பப் பெறத் தொடங்கியுள்ளன, இது வரலாற்றின் மிகப்பெரிய விமானப் பயணத்தின் முடிவின் தொடக்கத்தைக் குறிக்கிறது. தலிபான்கள் அமெரிக்காவின் சுயமாக விதிக்கப்பட்ட ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் வெளிநாட்டுப் படைகள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்-மேலும் வெளியேற்றமும் முடிவடைய வேண்டும்.

இதே வேளை வாசிங்டனில், ஜனாதிபதி பைடன் அதிகாலையில் பாதுகாபபுக்கள் அதிகம் நிறைந்த வெள்ளை மாளிகை அறையில் பணியில் இருந்தபோது, அங்கு அவருக்கு காபூல் குண்டு வெடிப்புக்கள் தொடர்டபாக வெடிப்புகள் விளக்கப்பட்டது மற்றும் காபூலில் உள்ள அவரது தேசிய பாதுகாப்பு குழு மற்றும் தளபதிகளுடன் அவர் உரையாடல்களை ஜனாதிபதி நடத்தினார்

ஒரே இரவில், மேற்கத்திய தலைநகரங்களில் இருந்து ஐஎஸ்ஸின் அச்சுறுத்தல் குறித்து எச்சரிக்கைகள் வெளிப்பட்டன, எனினும் தாக்குதலுக்கு சற்று முன்பு, காபூலுக்கான அமெரிக்க தூதர் ரோஸ் வில்சன், காபூல் விமான நிலையத்தில் ஒரே இரவில் பாதுகாப்பு அச்சுறுத்தல் "தெளிவாக நம்பகமானதாக, உடனடி, கட்டாயமாக கருதப்படுகிறது" என்றார்..

புதன்கிழமை பிற்பகுதியில், அமெரிக்க தூதரகம் குறிப்பிடப்படாத பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மூன்று விமான நிலைய வாயில்களில் காத்திருந்த ஆப்கானிஸ்த்தானியர்களை உடனடியாக வெளியேறுமாறு எச்சரித்தது. இதே போன்று ஆஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளும் வியாழக்கிழமை விமான நிலையத்திற்கு செல்ல வேண்டாம் என்று தங்கள் குடிமக்களுக்கு அறிவுறுத்தின.

தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிீஹல்லா முஜாஹித் விமான நிலையத்தில் எந்த தாக்குதலும் நடக்காது என்று உறுதியளித்தார், அங்கு தலிபான் குழுவின் ஆயுததாரிகள் நிறுத்தப்பட்டனர் மற்றும் எப்போதாவது கூட்டத்தைக் கட்டுப்படுத்த கனரக தந்திரங்களைப் பயன்படுத்தினர்.

குண்டுவெடிப்புக்கு முன்னர், தலிபான்கள் ஒரு விமான நிலைய வாயிலில் கூடியிருந்தவர்கள் மீது தண்ணீர் பீச்சியடிக்கும் கருவி மூலம் தெளித்தனர், கூட்டத்தை விரட்ட முயன்றனர்,

ஐஸஸ் நடத்திய நேற்றைய தாக்குதலில் பாதிக்கப்பட்ட பலர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். 27 வயதான ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த நாடியா சதாத் என்னும் பெண் தனது 2 வயது மகளை விமான நிலையத்திற்கு வெளியே சுமந்து சென்றார். கூட்டணிப் படைகளுடன் பணிபுரிந்த அந்தப் பெண்ணும் அவருடைய கணவரும், வெளியுறவுத் துறை என்று நம்பும் எண்ணிலிருந்து வந்த அழைப்பைத் தவறவிட்டனர் மற்றும் எந்த பாதுகாப்பும் இல்லாமல் விமான நிலையத்திற்குள் நுழைய முயன்றனர். அவளுடைய கணவர் அவர்களை உள்ளே அழைத்துச் செல்ல முயன்றார்.

"எங்கள் உயிருக்கு ஆபத்து இருப்பதால் நாங்கள் வெளியேற ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்," என்று சதாத் கூறினார். "என் கணவருக்கு தெரியாத ஆதாரங்களில் இருந்து பல மிரட்டல் செய்திகள் வந்தன. தப்பிப்பதைத் தவிர எங்களுக்கு வாய்ப்பில்லை." என்றும் அந்தப் பெண் தெரிவித்தார்.

மேலும் அமன் கரிமி, என்னும் 50 வயதுடைய பெண் ஒருவர் தனது மகள் மற்றும் அவரது குடும்பத்தினரை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார், நேட்டோவுடன் தனது கணவரின் வேலை காரணமாக தலிபான்கள் அவளை குறிவைப்பார்கள் என்று பயமே அந்தக் குடும்பத்தை விமான நிலையம் வரை கொண்டு சென்றது

"நேட்டோவுடன் பணிபுரிந்தவர்களை தலிபான்கள் ஏற்கனவே தேடத் தொடங்கியுள்ளனர்" என்று அவர் கூறினார். "அவர்கள் இரவில் வீடு வீடாக அவர்களைத் தேடுகிறார்கள்." என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் ஆப்கானிஸ்தானின் எதிர்வரும் நாட்கள் எவ்வா இருக்கப்போகின்றன என்பதும் ஐஸஸ் பயங்கரவாத அமைப்பின் தாக்குதல்கள் எத்தனை உயிர்களைப் பறிக்கப்போகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்று ஆப்கானிஸ்த்தானில் தறபோது தங்கியுள்ள மேற்குலக நாடொன்றின் இராணுவத் தளபதி தெரிவித்ததாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் செய்தி எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் போது, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாசிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்துபோது, இந்த தாக்குதலுக்கானதும் பலியாகிப் போயுள்ள ஆப்கான் மக்களதும் அமெரிக்க வீரர்களினதும் உயிர்களுக்கு தலிபான்களும் ஐஸஸ் பயங்கரவாத அமைப்பும் விலையைக் கொடுக்க வேண்டிவரும் என்று தெரிவித்தார். இதே வேளையில் மிகுந்த கோபம் கொண்டவராகவும் ஜோ பைடன் காணப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# How to Go Grocery Shopping When You are on a Budget?

# நீங்கள் வரவு–செலவில் இறுக்கமாக உள்ளபோது பலசரக்கு கடைக்கு எப்படி செல்வது?



உணவுப்பொருட்களின் விலைகள் ஏறிக்கொண்டே இருப்பதால், மக்கள் மிகவும் மலிவானதும் மற்றும் குறைவான ஆரோக்கியம் கொண்டதுமானதும் மற்றும் சமநிலையான விருப்பங்களோடு பொருட்களை கொள்வனவு செய்கின்றார்கள். நாங்களும் அந்த வலையத்திற்குள் வருவதை நான் உணர்கின்றேன், எனவே எங்கள் மளிகைக்கடை செலவுகளைக் குறைக்க நான் தீர்மானித்துவிட்டேன்.

எப்போதாவது காலி.ஃ.பிளவரை வாங்குவதைத் தவிர, எங்கள் மளிகைக் கடையின் செலவின்அளவை என்னால் கணிசமாகக் குறைக்க முடிந்தது, மேலும் நான் பின்பற்றிய உதவிக்குறிப்புகள் மற்றும் திட்டமிட்ட யோசனைகள் உங்களில் சிலருக்கு பெறுமதி மிக்கதாக இருக்கும் என்று நான் உணர்கிறேன். எமது வரவு செலவுத் திட்டத்தில் மளிகைக் கடையில் பொருட்களை எவ்வாறு கொள்வனவு செய்வது என்பதற்கான எனது பரிந்துரைகள் கீழே உள்ளன, அத்துடன் ஊட்டச்சத்துள்ள உணவு முறையுடன் கூடியவரை புதியவற்றை தீர்மானிக்கும் நிலையில் இருங்கள்:

எமது வரவு செலவுத்திட்டத்தின் படி பலசரக்கு கடையில் பொருட்கள் வாங்குவதற்கான உதவிக்குறிப்புகள் பின்வருமாறு:

### கறிகளின் திட்டம் + ஒரு பட்டியலை உருவாக்குங்கள்

நான் எப்போதும் கறிகள் தயாரிப்பில் முன்னும் பின்னுமாக செல்கிறேன், முக்கியமாக நான் சோம்பேறியாக இருக்க முடியும் இருப்பினும், உணவு வாங்குவதற்கு அது எவ்வளவு நம்பகமானது என்பதை நிராகரிக்க முடியாது. ஞாயிற்றுக் கிழமைகளில், நான் பொதுவாக சி உடன் அமர்ந்திருக்கிறேன், அந்த வாரத்தில் நாம் என்ன சாப்பிட விரும்புகிறோம் என்பது குறித்து நாங்கள் கதைத்து தீர்மானிப்போம். அதேபோல, அந்த வாரம் சமையலறையில் நான் நின்றி தீர்மானிக்கும் போது பிடிக்கும் விஷயங்களைப் பற்றிய எனது உள்ளடக்க அட்டவணையைப் பார்க்கவும். அங்கிருந்து, இந்த சமையல் குறிப்புகளுக்கும் சமையலறையில் நாங்கள் பராமரிக்கும் பல்வேறு பொருட்களுக்குமாக நான் தேவைப்படும் பலசரக்குப் பொருட்களின் பட்டியலை நான் தயாரிக்கிறேன்.

எனது பலசரக்குப் பொருட்கள் பயன்பாட்டைப் பயன்படுத்தி படடியலை தயாரிக்க நாம் அதை எனது தொலைபேசியிலும், கடையிலும் விரைவாக பார்க்கலாம் என்பதை உறுதிசெய்து கொள்ளவும், அது எமக்கு கிடைத்தவுடன் அதைச் சரிபார்க்கவும். சரிபார்ப்பு பட்டியல் இல்லாமல், மளிகைக் கடையில் எங்கள் வேலை முடிந்துவிடாது, அதே போல் உணவுத் திட்டமும் இல்லாமல், உங்கள் பட்டியலை தயாரிக்க உங்களால் முடியாது.

### நெகிழ்வாக இருங்கள்

நீங்கள் பலசரக்கு கடையை அடைந்தவுடன், ப்ரோக்கோலியை காலி.ஃ.ப்ளவருடன் ஒப்பிடும்போது $5 அதிகமாக இருப்பதை நீங்கள் கவனிக்கிறீர்கள். எனவே, காலி.ஃ.பிளவர் இற்குப் பதிலாக ப்ரோக்கோலியை மாற்றவும்! உங்கள் கூறுகளைப் புரிந்துகொள்வது நல்லது, ஆனால் விற்பனை நடைபெறுகின்றது, அதே போல் ஒரு செயலில் உள்ள பொருளை மற்றொன்றுக்கு மாற்றுவது பரவாயில்லை. இது திட்டத்தின் பிரபலமாக இல்லாவிட்டால், உங்கள் பொருள் கொள்வனவில் நெகிழ்வாக இருங்கள் மற்றும் உங்கள் பண இருப்புக்கு ஏற்ப இடைவெளி கொடுக்க பட்டியலை மாற்றுங்கள்.

### உள்ளூர் பலசரக்குக் கடை

குறிப்பிட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டதை விட இது எளிமையானது இருப்பினும், ஒரு பெரிய பொது விதி என்னவென்றால், அது உள்ளூர் என்றால் குறைந்த செலவு ஆகும். குறைந்த பயணம், மற்றும் பணப் பரிமாற்ற விகித சிக்கல்களுடன், உங்கள் பட்டர்நட் ஸ்குவாஷ் காய்கறி அந்த $8 ராஸ்பெரி பழங்களுடன் ஒப்பிடும்போது சற்று மலிவாக இருக்க வேண்டும். அதேபோல், இதன் மூலம் உங்கள் உள்ளூர் விவசாயிகளை ஆதரிக்க உதவுகிறது, யாரும் அதைப் பற்றி பெரிதாக உணரவில்லை என்பதே உண்மை.

### உறைந்த உடன் மாற்று நெகிழ்வாக இருங்கள்

நீங்கள் கடையை அடைந்தவுடன், ப்ரோக்கோலி காலி.ஃ.ப்ளவருடன் ஒப்பிடும்போது $5 அதிக விலைக்கு இருப்பதை நீங்கள் கவனிக்கிறீர்கள். எனவே, காலி.ஃ.பிளவர் இடத்தில் ப்ரோக்கோலியை மாற்றவும்! உங்கள் கூறுகளைப் புரிந்துகொள்வது நல்லது, ஆனால் விற்பனை ஏற்படுகிறது, அதே போல் ஒரு செயலில் உள்ள பொருளை மற்றொன்றுக்கு மாற்றுவது பரவாயில்லை. இது திட்டத்தின் பிரபலமாக இல்லாவிட்டால், உங்கள் வாங்குதலில் நெகிழ்வாக இருங்கள் மற்றும் உங்கள் பர்ஸுக்கு இடைவெளி கொடுக்க பட்டியலில் வேறுபடுங்கள்.

### பனியில் உறைந்த காய்கறிகளுடனான மாற்றுத் திட்டம்

ஆனால் எப்போதாவது, உங்கள் உணவு 8 டாலர் ராஸ்பெர்ரி மீட்பை விரும்புகின்றது! பனிக்கட்டியில் உறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு எதிரான கருத்து எனக்கு உண்மையில் எதுவும் இல்லை. எப்போதும்போல, அவை உயர்தரத்திற்கு முன்னால் உள்ளன, ஆனால் சில சிறந்த தரமான இயற்கையான பனிக்கட்டியில் உறைந்த பழங்கள் உள்ளன, அதே போல் சந்தையில் அல்லது பலசரக்குக் கடையில் காய்கறிகளும் ஊட்டச்சத்துக்களைப் பாதுகாக்க மிகவும் உகந்த நேரத்தில் பனியில் உறை வைப்பது அவசியமாக உள்ளன. குளிர்காலத்தில், நான் கிட்டத்தட்ட பிரத்தியேகமாக நான் வாங்கும் பெரி பழங்களை பனியில் உறைய வைக்கின்றேன்.

பிரத்தியேகமாக பனிக்கட்டியில் உறைய வைத்த உணவுகளை எப்போதும் சாப்பிடுவதற்கு உங்களால் இயலாமல் இருக்கும், ஆனால் புதிய காய்கறிகள் மாற்றாக இல்லாதபோது, பனியில் உறைய வைத்த காய்கறிகளை உபயோகிக்கலாம்.

இது பற்றிய ஏதேனும் கேள்விகள் gtacredit.com ஐப் பார்வையிடவும் அல்லது (416) 650-1100 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



ஒன்றாறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

**உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள் ளுங்கள்.**

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine** இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள **1-888-999-6488** ஐ அழையுங்கள்.

ஒன்றாறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


## 'உதயன்' பத்திரிகையின் வெள்ளி விழா சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக அன்பர்களுக்கும் வழங்கப்பெற்று வருகின்றன









கனடா உதயன்" பத்திரிகையின் நூற்று நான்கு பக்கங்கள் கொண்ட வெள்ளி விழா சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் வழங்கப்பெற்று வருகின்றன.

இந்தவகையில் கனடா ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் ஆதிபராசக்தி குரு மன்றத்தின் ஸ்தாபகர் திருமதி ஞானம்மா திருநாவுக்கரசு, **MAJESTIC CITY MALL** தமிழர் உள்ளக வர்த்தக அங்காடி யின் பொது முகாமையாளர் கிறிஸ் சிவக்கொழுந்து, மற்றும் **Standard Mortgages** நிறுவன அதிபர் ராஜ் சுப்ராயம், ஜிரிஏ வீடியோ புரடக்சன் மற்றும் சமூக ஊடகம் ஆகியவற்றின் நிறுவனர் கெங்கா ஆகியோருக்கு அண்மையில் பிரதம ஆசிரியர் அவர்களால் வழங்கப்பெற்றன.

- *செய்தியும் படங்களும் : சத்தியன்*

## Scarborough Centre தொகுதியின் லிபரல் வேட்பாளர் சல்மா சாகிட் தனது ஆதரவாளர்களுக்காக நடத்திய ஒன்று கூடல்




**Scarborough Centre** மத்திய பாராளுமன்றத் தொகுதியின் லிபரல் வேட்பாளர் சல்மா சாகிட் அவர்கள் சனிக்கிழமை மாலை தனது ஆதரவாளர்களுக்காகவும் நலன் விரும்பிகளுக்காகவும் ஒரு ஒன்று கூடலை ஸ்காபுறோவில் நடத்தினார்.

ஏராளமான ஆதரவாளர்கள் அங்கு சமூகமளித்திருந்தார்.

இங்கு காணப்படும் படங்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமான சல்மா சாஹிட், ஒன்றாரியோ மாகாணத்தின் முன்னாள் பிரதி முதலமைச்சர் ஜோர்ஸ் சிமிர்தமென் மற்றும் வர்த்தகப் பிரமுகர் பாஸ்கரன் சின்னத்துரை உதயன் பிரதம ஆசிரியர் ஆகியோர் மகிழ்ச்சியுடன் கலந்து கொணண்டிருப்பதையும் காணலாம்.

- *செய்தியும் படங்களும் : சத்தியன்*

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**



# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com





PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!
Joy Square Towns
Corebridge
Copperhill South Barrie
Deer Creek Fine Homes
Alba Condos
Edenshaw Developments Limited
ALBA
Arte Condos
EMBLEM
Vincent Condos
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Guglietti B...
Adagio Condos
Menkes Developments Ltd.
Kensington District Towns
Lynbury Homes
Minu Towns
Stateview Homes
Exchange District Condos 3
Camrost Felcorp
WestLine Condos
CentreCourt Developments Inc.
U.C. Tower 2
Tribute Communities and Riocan Real Estate Investment Trust
Verge Condos
Riocan Real Estate Investment Trust
Gemma Condos
Pinnacle International
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
வெள்ளி விழாவும்
நண்பன் விருது விழாவும்
WORLDWIDE
Tasty தமிழா
30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்
கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து
Covid-19
கட்டுப்பாடுகளுக்கு
ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்
Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4
அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512

## சிறுகதை -- ஆர். என். லோகேந்திரலிங்கம்

# தாயாடு



படுக்கையை விட்டு காலையில் எழுந்தபோதே லிங்குதாஸின் மனம் இதமாக இருந்தது. பணியிலிருந்து ஓய்வெடுத்த அவரோடு, வயதான காலத்தில் பொதுவாகவே பலருக்கு காலையில் கண்விழிக்கின்றபோது தோன்றும் உடல் உபாதைகள் வந்து சேர்ந்து விட்டன. இவை மனதில் சிறிது சஞ்சலத்தை அவ்வப்போது ஏற்படுத்தினாலும், அன்றைய நாள் அவ்வாறு அமையாமல், அவரை வித்தியாசமாக வரவேற்றது.

காலை தொடக்கம் அன்றாடம் ஆற்ற வேண்டிய வேலைகளை எவ்வித சோர்வும் இன்றி கவனித்தார். நண்பர்கள் சிலரோடு தொலைபேசியில் உரையாடி மகிழ்ந்தார். பேரக்குழந்தைகளின் அருகில் சென்று அவர்களை சந்தோசப்படுத்தும் வகையில் இனிப்புக்களை வழங்கினார். வீட்டின் பின்புறத்தில் உள்ள சிறிய தோட்டத்திற்கு சென்று மரக்கறிக் கன்றுகளுக்கு நீர் பாய்ச்சினார்.

பெரும்பாலும் மதிய உணவிற்குப் பின்னர் ஒரு குட்டித்தூக்கத்தை அணைத்துக்கொள்ளும் லிங்குதாஸ் அன்று உற்சாகத்தோடு காணப்பட்டார். ஏதாவது புத்தகம் வாசிக்க வேண்டும் என அவரது மனம் சொல்லியது. புத்தக அலுமாரியின் அருகில் சென்று, இன்று எதை வாசிக்கலாம்? என்று தன்னிடத்தில் ஒரு கேள்வியை முன் வைத்தார்.

பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சஞ்சிகை ஒன்று அவர் கைகளுக்கு அகப்பட்டது. ஏற்கெனவே வாசித்தது என்றாலும், அதை விருப்போடு தன் கைகளில் எடுத்துக்கொண்டார். சஞ்சிகையில் கொஞ்சம் தூசு இருப்பதை விரல்கள் உணர்த்தியதால், 'ரிசு' ஒன்றை எடுத்து அதை துடைத்துவிட்டு, தான் வழமையாக வாசிப்பதற்கு பயன்படுத்தும் சோபாவில் போய் அமர்ந்து கொண்டார்.

பொதுவாகவே சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ள சிறுகதைகள் அல்லது கவிதைகளை வாசிக்கும் போது, லிங்குதாஸிடம் தானாகவே ஒரு உற்சாகம் பிறந்து விடும். படைப்புக்களை ஆழமாகவும் அனுபவித்தும் வாசிக்கும் பக்குவம் அவரிடத்தில் இளவயதிலிருந்து இன்று வரை தொடர்கின்றது. அதுவும் ஒரு படைப்பை வாசிக்கத் தொடங்கும் முன்னர் அதன் தலைப்பையும் எழுதியவர் யார் என்பதையும் தவறாமல் கவனிக்கும் பழக்கம் அவரிடத்தில் எப்போதும் உண்டு. தனக்குப் பிடித்தமான படைப்பாளியாக இருந்தால், "இதை முதல் வாசிப்பம்" என்ற எண்ணியபடி அதற்குள் மூழ்கத் தொடங்குவிடுவார் லிங்குதாஸ்.

அவர் கைகளில் கைகளில் இருந்த சஞ்சிகையின் பக்கங்கள் விரியத் தொடங்கின. அன்றிலிருந்து சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஒரு இலக்கியச் சஞ்சிகை அது. முன்னர் அதை வாசித்த ஞாபகம் வந்தாலும், அது ஒரு தடையாகக் இருக்கவில்லை. பழைய எழுத்தாளர்கள் அல்லது கவிஞர்களை திரும்பவும் நினைவிற்கு கொண்டுவருவதில் லிங்குதாஸிற்கு ஆர்வம் அதிகம்.

பக்கங்களைப் புரட்டிக்கொண்டே, சில சிறுகதைகளுக்கு ரமணி அவர்களின் ஓவியங்கள் மேலும் அழகைக் கொடுப்பதை பரவசத்தோடு ரசித்தார். நவீன ஓவியங்களை கூர்ந்து அவதானித்து அவற்றுக்குள் என்னென்ன அம்சங்கள் மறைந்து கிடக்கின்றன என்று பார்த்தார். ஓரிடத்தில், அப் பக்கத்தின் வலது பக்க கீழ் மூலையில் ஒரு புதுக்கவிதை பெட்டி கட்டப் பெற்று பிரசுரமாகியிருந்தது. சுயநலம் என்ற தலைப்பில் செவ்வந்தி என்னும் கவிஞர் எழுதியிருந்தார். அவரை லிங்குதாஸிற்கு நன்கு பிடிக்கும். அத்தோடு அவர் பெண்ணின் பெயரைக் கொண்ட ஒரு ஆண் என்பதும் அவருக்குத் தெரியும்.

எவ்விதமான அவசரமுமில்லாமல் கவிதையை வாசித்தார்.

*இரண்டு*
*ஒரு வாரக் குட்டிகளோடு*
*நின்ற எனது வீட்டு ஆடு*
*நேற்று வீழ்ந்திறந்த போது*
*அனுதாபம் தெரிவிக்க வந்த சிலரில்*
*ஒருவரைத் தேடினேன்*
*'வளர்ந்த பின்*
*மறிக்குட்டிகளில் ஒன்று எனக்கு'*
*என்று எப்போதோ*
*மன்றாட்டமாய்க் கேட்டு வைத்த*
*முன் வீட்டுக்காரி*
*அங்கு முகம் காட்டவே இல்லை*

சிறிய கவிதையாக இருந்தனால் அதை மீண்டும் ஒரு தடவை ரசித்து வாசித்தார். அக்காலத்தில் புதுக்கவிதை எழுதிய செவ்வந்தி அவர்கள் தற்போது கவிதை இலக்கனத்தைக் கற்று, தன்னை ஒரு மரபுக் கவிஞராக அடையாளம் காட்டி வருவதையும் லிங்குதாஸ் அப்போது நினைத்து கொண்டார்.

தனது இள வயது மாணவப் பருவத்தில் தங்கள் வீட்டில் அம்மாவின் கண்காணிப்பில் வளர்ந்த ஆட்டுக்குட்டிகள், தாய் ஆடு போன்றவை லிங்குதாஸிற்கு ஞாபகத்திற்கு வந்தன. கறுப்பும் வெள்ளையுமாக இரண்டு அல்லது மூன்று ஆட்டுக் குட்டிகள் சுதந்திரமாக அவரது வளவிற்குள் ஓடித் திரிந்த காட்சிகள் மீண்டும் மனத்திரையில் ஓடின. தாயாடு ஒரு நிறத்திலிருந்தாலும் அதற்கு பிறக்கும் குட்டிகள் வேறு நிறங்களில் இருப்பதும் குட்டிகளை ஈன்ற தாயாடுகள் சில வேளைகளில் உடல் நலம் குன்றி இறந்து போவதும், தாயை இழந்த ஆட்டுக் குட்டிகள் 'பே' 'பே' என்று பாலுக்காவும் பிரிந்த சென்ற தாய்க்காகவும் அலறித் துடிப்பதை லிங்குதாஸ் அனுபவித்திருக்கின்றார்.

தாயாடு இறந்து சில நாட்களில் அதன் குட்டிகளும் பசியாலும் தாயின் பிரிவாலும் இறந்து போகையில் அயலவர்கள் வந்து தங்கள் கவலைகளைப் பகிர்ந்து விட்டு போவதான நேயத்தை காட்டும் உணர்வு மிகுந்த ஊர்மண்ணின் மகிமையை மனதில் ஒரு தடவை மீட்டுக்கொண்டார்.

"ஒரு சின்னக் கவிதையில் எங்கள் ஊர்ச் சூழலை எவ்வளவு அழகாக செவ்வந்தி சொல்லியிருக்கின்றார்" என்று மனதிற்குள் அவரைப் பாராட்டினார் லிங்குதாஸ்.

யாழ்ப்பாணத்தில் மாடுகளை வளர்க்கும் வழக்கம் பெருமளவில் இல்லாவிட்டாலும் ஆடு வளர்ப்பதில் அனைவருமே ஆர்வம் காட்டுவர்கள். இந்த வழக்கம் வருமானத்தைப் பெறும் மறைமுகமான நோக்கத்தை கொண்டது என்பதும் உண்மை.

லிங்குதாஸ் அவர்களோடு கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள். ஆனால் அம்மாவின் ஆடு வளர்ப்புத் 'தொழிலுக்கு' துணையாக நின்றவர் லிங்குதாஸ் ஒருவரே. அதிகாலையில் கதிரவனின் ஒளிக் கீற்றுக்கள் பூமியைத் தழுவுவதற்கு முன்னரேயே அவரது தூக்கத்தை அம்மா கலைத்து விடுவார்.

"எழும்பு. எழும்பு" என்று முதுகில் தட்டியவுடன் லிங்குதாஸ் கண்களைக் கசக்கியபடி எழுந்திடுவார். கிணற்றடியில் முகத்தைக் கழுவிய பின்னர் ஆடுகள் கட்டப்பட்டிருக்கும் 'கொட்டிலின்' கூரையில் செருகி வைக்கப்பட்டிருக்கும் ஒரு நீண்ட கம்பியை எடுத்துக் கொண்டு வெளியே புறப்படுவார்.

அந்த கிராமத்தில் ஒரு சில வீடுகளில்தான் உயரமாய் வளர்ந்த பலா மரங்கள் இருந்தன. அவற்றிலிருந்து உதிர்ந்து விழும் பழுத்த இலைகள் நிலத்தில் கொட்டிப் பரவிக் கிடக்க, அவற்றை தான் கொண்டு செல்லும் கம்பியால் குத்தி எடுத்துக் கொண்டு வருவதே அவரது காலைப் பணியாக அந்த நாட்களில் இருந்தது.

அந்த அதிகாலையிலும் அவர் நடந்த செல்ல மாட்டார் ஓடுவார். காரணம் அவரைப் போன்றே வேறு சிலரும் கைகளில் 'கம்பிகளோடு' ஆட்டுக்கு இரை தேடி வருவதுண்டு. ஆமாம், மரத்திலிருந்து உதிர்ந்த பலா இலைகளை குத்தி எடுப்பதிலும் போட்டிதான். அவ்வாறு லிங்குதாஸ் அவசர அவசரமாக ஓடிச் செல்லும் சில நாட்களில், குறிப்பிட்ட ஒரு வீட்டின் முற்றத்திற்கோ அன்றி பிற்பகுதிக்கோ சென்றால் இலைகள் விழுந்து கிடக்கும் தரை வெறுமையாக காணப்படும். உடனே விரைவாக ஊகித்துக் கொள்வார் லிங்குதாஸ். 'கிளியன் வந்து குத்திக் கொண்டு போய்விட்டான் போல'.

உடனே மற்றொரு வீட்டுக்குப் ஓடிச் செல்வார். அங்கு லிங்குதாஸிற்கு தாராளமாக இலைகள் காத்துக்கிடக்கும். மிகுந்த மகிழ்ச்சியோடு தரையில் கொட்டிக் கிடக்கும் பலா இலைகளை தனது கம்பியால் குத்திக் குத்தி, எடுத்து விரல்களால் அவற்றை பின்னால் ஒதுக்கிக் கொள்வார். அந்த கம்பியின் முழு நீளப் பகுதியும் இலைகளால் நிறைந்து கொள்ள, அவரது மனதும் நிறைந்து விடும். இனிப் போகலாம் என்ற முடிவோடு வீட்டுக்கு திரும்புவார். அப்போதும் கூட அவரது நினைப்புகள் எல்லாம் அம்மாவின் வளர்ப்பு ஆடுகள் பற்றியே இருக்கும்.

சில வீடுகளின் வேலிகளில் செழித்து வளர்ந்திருக்கும் 'சீமைக் கிழுவை' மரங்களிலிருந்து சத்தம் எதுவும் எழுப்பாமல் சில சிறிய கிளைகளை முறித்தெடுத்துக் கொள்வார். வீட்டுக்கு திரும்பிச் சென்று பின் வளவிற்குச் செல்ல, அங்கு ஆடுகளும் குட்டிகளும் 'இரை'க்காக காத்திருப்பதை கண்டு உற்சாகத்தோடு அவற்றின் பசி தீர்ப்பார் லிங்குதாஸ்.

இந்த ஆடு வளர்ப்புப் பொருளாதாரம் என்பது அப்போது, அந்த கிராமத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஆடுகள் வாங்குவதற்காக நகரத்தின் சோனகதெருப் பகுதியிலிருந்து வியாபாரிகள் கிராமத்திற்கு வருவார்கள். தங்கள் சைக்கிள்களின் பின்பகுதியில் கெரியருக்கு மேலே பலகைகளினால் செய்யப்பெற்ற ஒரு பெட்டியைக் கயிற்றினால் கட்டிய வண்ணம், சத்தமெழுப்பியபடி குச்சொழுங்கைகளுக்கும் அவர் வருவார்கள். ஒரு சங்கீததைப் போல ஒலிக்கும் 'ஆடு நிக்குதா ஆடு?' 'ஆடு நிற்குதா ஆடு' என்று அவர்களின் குரல் கேட்டு மக்களின் கவனம் ஒழுங்கைப் பக்கம் செல்லும்.

குட்டிகளை ஈன்ற ஆடுகள் முதுமையை எட்டிய நிலையில் நின்றால் அவற்றை என்ன செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் ஆட்டு வியாபாரிகளின் வருகையைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள். அவற்றை அவர்கள் கேட்கின்ற விலைகளுக்கே கொடுத்துவிடுவார்கள். "இந்த 'கிழட்டு' ஆடுகளைக் கொண்டு போய் என்ன செய்யப்போகின்றீர்கள்" என்று கூட கிராமத்தவர்கள் அந்த நகரத்து வியாபாரிகளிடம் கேட்பதில்லை. ஏனென்றால் இந்த இறைச்சியை வாங்கிச் சென்று சுவைத்து உண்ணப்போகின்றவர்கள் நகரத்தவர்கள் தான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

லிங்குதாஸ் நீண்ட நேரம் புத்தகம் வாசிக்கின்றார் என்பதைக் கவனித்த அவரது துணைவியார் இஞ்சிச் சாறு கலந்து தேநீரை கொண்டு வந்து அவருக்கு அருகில் இருந்த சிறிய மேசையொன்றில் வைத்துவிட்டுச் சென்றார். தான் பிறந்த கிராமத்தின் காட்சிகளை மனக் கண்களால் கண்டு ரசித்தும் அவ்வப்போது தன் அம்மாவை எண்ணி கண் கலங்கியும் உணர்ச்சி வசப்பட்டவராக இருந்த லிங்குதாஸ் கோப்பையை எடுத்து உதட்டில் வைத்து இஞ்சித் தேநீரை உறிஞ்சிச் சுவைத்தார்.

இவ்வாறு கிராமத்து வீடுகளை நோக்கி வரும் நகரத்து ஆட்டு வியாபாரிகள்,சில வேளைகளில் தாங்கள் வந்த நோக்கத்தைக் கைவிட்டு சில 'கைங்கரியங்களில்' ஈடுபடுவார்கள். ஒரு நாள் லிங்குதாஸின் வீடு அமைந்திருந்த கிராமம், பரபரப்பாகக் காணப்பட்டது. 'என்ன நடந்தது' என்று கேள்விகளை எழுப்பியவண்ணம் ஊரார் ஒவ்வொரு குச்சொழுங்கைச் சந்திகளிலும் கூடி நின்றார்கள்.

இரண்டு சிறுமிகள் தங்கள் வீடுகளுக்கு முன்பாக வீதிகளில் விளையாடிக் கொண்டிருந்தபோது அவர்கள் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலிகளை நகரத்து ஆட்டு வியாபாரி ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடி விட்டான் என்ற செய்தி சில நிமிட நேரங்களில் உறுதியாகிவிட்டது.

வீடுகளில் வேலைகள் எதுவுமின்றி படுத்துக்கிடந்த இளைஞர்கள் பட்டாளம் கிளம்பி விட்டது. நான்கு திசைகள் நோக்கியும் அவர்களது துவிச்சக்கர வண்டிகள் பறந்தன.

அரை மணி நேரத்தில், நகரத்து ஆட்டு வியாபாரிகள் நான்கு பேரை ஆங்காங்கே சில இடங்களில் கண்டு அவர்களை அந்த இரண்டு சிறுமிகளின் வீட்டுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினார்கள் கிராமத்தின் 'இளம் சிங்கங்கள்'. அவர்கள் ஆட்டு வியாபாரிகள் தான் என்பதை அவர்களின் சைக்கிள்களின் பின்னால் கட்டப்பட்டிருந்த பலகைப் பெட்டிகள் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தன. அவற்றுக்குள் இருந்த சில 'கிழட்டு' ஆடுகள் மிரண்டு போய் சத்தமிட்டுக் கொண்டிருந்தன. ஆடுகளின் 'பே, பே' என்ற சத்தமும் கிராமத்தவர்கள் உரத்துக் கதைக்கும் சத்தமும் சேர்ந்து, இரைச்சல் நிறைந்ததாக இருந்தது அந்த இடம்.

அந்த இரைச்சல்களுக்குள்ளும் ஒரு ஊர்ப்பெரியவர் அந்த நான்கு ஆட்டு வியாபாரிகளையும், இரண்டு சிறுமிகளுக்கு முன்பாக அழைத்து வரச் சொன்னார்.

"பிள்ளைகள்! உங்கட சங்கிலிகளை அறுத்துக் கொண்டு போனவன் யாரென்று காட்டுங்கோ?" என்று பொலிஸ்காரர் போன்ற தோரணையில் கேட்டார். அந்த நால்வரையும் பார்த்த சற்று யோசித்த வண்ணம் இருந்த அந்த சிறுமிகளில் மூத்தவள் "இந்த மாமா இல்லை" "அந்த மாமா தான்" என்று ஒரு ஆட்டு வியாபாரியை நோக்கி சுட்டு விரல்களை நீட்டினாள். அவள் விரலைக் காட்டிய அதே வேகத்தில் அந்த வியாபாரி மீது வேகமாகப் பாய்ந்து தங்கள் வேலைகளைக் காட்டத் தொடங்கினார்கள், அவ்வூரின் இளைஞர்கள்.

தங்கள் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு ஓடிய திருட்டுத் தனம் கொண்ட அந்த ஆட்டு வியாபாரியை "மாமா" என்று அழைத்த அந்த சிறுமிகளின் 'குழந்தை மனதை'எண்ணி வியந்தபோது, அவரது இரண்டு பேத்திகளும் ஞாபகத்திற்கு வந்தார்கள். அவர்களை அழைத்து இரண்டு இனிப்புக்களை கொடுத்தனுப்பிய லிங்குதாஸ் மீண்டும் அந்த சஞ்சிகையில் மூழ்கினார்.

# ரொறன்ரோவின் ‘ரைசன்’ பல்கலைக் கழகத்தின் பெயர் மாற்றப்படவுள்ளதாக அதன் ஆளுனர் சபை அறிவித்துள்ளது




மேற்படி பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒரு அறிக்கையில் இதை உறுதிப்படுத்தியது.

பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவின் 22 பரிந்துரைகளை அங்கீகரித்தது. 11,000 க்கும் மேற்பட்ட ரைர்சன் சமூகத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பங்கேற்பால் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

”பல்கலைக்கழகம் எவ்வாறு முன்னோக்கிச் சென்று நமது வரலாற்றில் அடுத்த அத்தியாயத்தை எழுதலாம் என்பதற்கான தெளிவான பரிந்துரைகளை இந்த அறிக்கை வழங்குகிறது” என்று பல்கலைக்கழகத்தின் தலைவரும் துணைவேந்தருமான முகமது லச்சேமி ஒரு அறிக்கையில் கூறினார்.

பரிந்துரைகளில் ஒன்று பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றுவது.

முன்னாள் வதிவிடப் பள்ளியில் கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளின் எச்சங்கள் தொடர்பாக கனடாவின் வதிவிடப் பள்ளி அமைப்பின் கட்டிடக் கலைஞர்களில் ஒருவரான எகேர்டன் ரைர்சனின் சிலை ஆர்ப்பாட்டக்காரர்களால் இடிக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்டது. கம்லூப்ஸில் உள்ள தளம், கி.மு

கடந்த வருடத்தில், பள்ளியின் பெயரை மாற்றுவதில் உள்ள ஒரு உள் முரண்பாடுகள் பொதுமக்களுக்கு பரவியதால், தற்போதைய நன்கொடையாளர்களிடமிருந்து புகார்களை நிர்வகிக்கும் போது பல்கலைக்கழகம் நன்கொடையாளர்களுக்கான வாய்ப்புகளை இழந்தது, அவர்களில் சிலர் பல்கலைக்கழகத்திற்கு தங்கள் அன்பளிப்புக்களை எப்படியும் நிறுத்திவிடுவார்கள் என்று அச்சுறுத்தினர்.

ஏனைய சில பரிந்துரைகளில் எஜெர்டன் ரைர்சனின் பாரம்பரியத்தை அங்கீகரிப்பதற்கான பொருட்களை பகிர்ந்துகொள்வதும், பூர்வீக வரலாறு மற்றும் பூர்வீக மற்றும் காலனித்துவ உறவுகளைப் பற்றி அறிய அதிக வாய்ப்புகளை வழங்குவதும் உரியன என்றும் தெரிவிக்கப்பட்டன.

# தடுப்பூசி போட மறுக்கும் ரொறன்ரோ மாநகர சபை ஊழியர்கள் பணிநீக்கத்திற்கு உள்ளாகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

TORONTO

ரொறன்ரோ மாநகர சபையால் நேற்று வியாழக்கிழமை விடுக்கப்பட்ட புதிய அறிவிப்பின்படி ரொறன்ரொ நகரசபையால் கோவிட்-19 க்கு எதிரான முழுமை-யாக தடுப்பூசி போட மறுக்கும் ஊழியர்கள் பணிநீக்கம் மற்றும் ஏனைய நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாக அறிவித்தது

ரொறன்ரோ நகரசபையின் 37,000 ஊழியர்களுக்கு நகரத்தின் கட்டாய கோவிட்-19 தடுப்பூசி செலுத்த வேண்டிய அறிவிப்பு வெளியான பின்னர் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய மருத்துவ காரணங்கள் உட்பட சில வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அதே வேளையில், இந்த கட்டாய அறிவிப்புக்கு இணங்காத ஊழியர்கள் பணிநீக்கம் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்ளாகலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

ரொறன்ரோ மாநகர சபையில் புதிதாக பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பணியமர்த்தப்படுவதற்கான நிபந்தனையாக முழுமையாக தடுப்பூசி போடப்பட வேண்டும் என்றும் தற்போதைய அறிவிப்பு வலியுறுத்தியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

ஏதிர்வரும் அக்டோபர் 30-க்குள் முழு தடுப்பூசி தேவைப்படும் இந்த அறிவிப்பானது ரொறன்ரோ நகரசபை ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் முழுநேர மற்றும் பகுதிநேரமாக பணியாற்றும் அனைவருக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# போதை பொருள் வழக்கில் கைதான நடிகைகள்




போதைப்பொருள் வழக்கில் கைதான நடிகைகள் ராகினி திவேதி, சஞ்சனா கல்ராணி ஆகியோர் போ-தைப் பொருள் பயன்படுத்தியிருப்பது உறுதியாகியுள்ளது.

நடிகைகளின் தலைமுடி மாதிரியை ஆய்வு செய்ததில் போதைப் பொருள் பயன்படுத்தியிருப்பது உறுதியாகியுள்ளது



# மேகதாது அணை; காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்கக் கூடாது: ராமதாஸ்



மேகதாது அணை தொடர்பாக, காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்கக் கூடாது எனவும், திட்ட அறிக்கையைத் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும், பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக, ராமதாஸ் ஆக.26 வெளியிட்ட அறிக்கை: "காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்கு அனுமதி அளிப்பது குறித்து, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டத்தில் விவாதிக்க ஏற்பாடு செய்வதாக, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர ஷெகாவத் உறுதியளித்திருப்பதாக, கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தகவல் உண்மையாக இருந்தால் அது கண்டிக்கத்தக்கது.மேகதாது அணையை எப்படியாவது கட்டியே தீர வேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டும் கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை, நேற்று டெல்லியில் மத்திய நீர்வள அமைச்சர் கஜேந்திர ஷெகாவத்தைச் சந்தித்துப் பேசியுள்ளார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பொம்மை, 'காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தின் அடுத்த கூட்டத்தின் விவாதத்துக்கான பொருட்களில் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையையும் சேர்ப்பதாக, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் ஷெகாவத் என்னிடம் உறுதியளித்தார்' என்று கூறினார்.தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை குறித்து, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் விவாதிப்பது சாத்தியமே இல்லை என்னும் சூழலில், இத்தகைய வாக்குறுதியை மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அளித்திருப்பது தவறு; அதை ஏற்க முடியாது.

மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க 2018ம் ஆண்டில் மத்திய அரசு அனுமதி அளித்ததில் இருந்தே, இந்த விவகாரம் குறித்து காவிரி மேலாண்மை ஆணையத்தில் இதுகுறித்து விவாதிப்பதற்கான முயற்சிகளைக் கர்நாடக அரசு மேற்கொண்டு வருகிறது.03.12.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இதுகுறித்து பிரச்சினை எழுப்ப கர்நாடக அரசின் பிரதிநிதிகள் முயன்ற நிலையில், தமிழக அரசு அதிகாரிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், மேகதாது குறித்து விவாதிக்க காவிரி மேலாண்மை ஆணையம் மறுத்துவிட்டது.அதன்பின், ஒவ்வொரு கூட்டத்திலும் மேகதாது அணை குறித்து கர்நாடகம் விவாதிக்க முயல்வதும், தமிழகத்தின் எதிர்ப்பால் அது கைவிடப்படுவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. இத்தகைய சூழலில், மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டத்துக்கான விவாதப் பொருளில் மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையைச் சேர்ப்பது நிச்சயமாக கர்நாடகத்துக்கு ஆதரவான செயலாகும்.

இத்தகைய ஒரு சார்பு நடவடிக்கைகளில் மத்திய அரசோ, மத்திய அமைச்சரோ ஒருபோதும் ஈடுபடக் கூடாது.மேகதாது விவகாரத்தில் மத்திய அரசு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு மத்திய நீர்வளத்துறை அமைச்சராக இருந்த உமாபாரதி சிறந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கடைமடை மாநிலமான தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல், கர்நாடகம் விரிவான திட்ட அறிக்கை தாக்கல் செய்தால் அதை மத்திய அரசு பரிசீலிக்காது; அதை கர்நாடகத்துக்கே திருப்பி அனுப்பிவிடும் என்பதுதான் பாமகவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சரும், அப்போதைய மக்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸுக்கு 2015ஆம் ஆண்டில் எழுதிய கடிதத்தின் மையக்கரு ஆகும்.அதுமட்டுமின்றி, சிவசமுத்திரம் திட்டத்துக்காக, 2014ஆம் ஆண்டு கர்நாடக அரசு தாக்கல் செய்த விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையம் திருப்பி அனுப்பிவிட்டது என்றும் உமாபாரதி கூறியிருந்தார்.

அதுதான் மிகவும் சரியான நடவடிக்கை.அதே நடைமுறையைப் பின்பற்றி, தமிழகத்தின் இசைவு பெறாமல் தாக்கல் செய்யப்பட்ட மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையையும் மத்திய அரசு திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். அதுவும் மேகதாது அணைக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டதே தவறு என்று மத்திய அரசே ஒப்புக்கொண்டுவிட்ட நிலையில், திருப்பி அனுப்புவது தான் சரியான செயலாக இருக்க முடியும்.அதை விடுத்து, முறைகேடான வழியில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள மத்திய அரசே ஏற்பாடு செய்வது தமிழகத்துக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

மேகதாது அணை விவகாரத்தில், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாகச் செயல்பட வேண்டிய மத்திய அரசு ஒரு மாநிலத்துக்கு சாதகமாகச் செயல்படக் கூடாது.எனவே, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டத்துக்கான விவாதப் பொருளில் மேகதாது அணை விவகாரத்தை மத்திய அரசு சேர்க்கக் கூடாது. அதுமட்டுமின்றி, தமிழகத்தில் ஒப்புதல் இல்லாமல் தயாரிக்கப்பட்ட மேகதாது அணை விரிவான திட்ட அறிக்கையைக் கர்நாடகத்துக்கு திருப்பி அனுப்ப வேண்டும்". இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணியா? தனித்துப் போட்டியா? கமல் ஆலோசனை



உள்ளாட்சித் தேர்தல் குறித்து மக்கள் நீதி மய்யக் கட்சி நிர்வாகிகளுடன் அக்கட்சித் தலைவர் கமல்ஹாசன் இன்று ஆலோசனை நடத்தினார். கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி 2019 மக்களவைத் தேர்தலிலும், நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும் போட்டியிட்டது. இரு தேர்தல்களிலும் அக்கட்சி தோல்வியைச் சந்தித்தது. சட்டப்பேரவைத் தேர்தலில் தான் போட்டியிட்ட கோவை தெற்கு தொகுதியில் மட்டும் கமல்ஹாசன் வெற்றிக்கு அருகில் நெருங்கி வந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்குப் பிறகு மகேந்திரன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கட்சியிலிருந்து விலகினர். இதையடுத்து, கட்சியின் கட்டமைப்பை மாற்றும் முயற்சியில் கமல்ஹாசன் ஈடுபட்டுள்ளார். உள்ளாட்சித் தேர்தலுக்குத் தயாராக வேண்டும் எனவும் நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டார்.இதனிடையே, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தலை செப். 15க்குள் நடத்தி முடிக்க வேண்டும் என, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், 9 மாவட்ட உள்ளாட்சித் தேர்தல் குறித்து மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் ஆகியோருடன் கமல்ஹாசன், ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் இன்று (ஆக. 26) ஆலோசனை நடத்தினார். தேர்தலில் தனித்துப் போட்டியா அல்லது கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதா என ஆலோசிக்கப்பட்டது.இது தொடர்பாக, கமல் தன் ட்விட்டர் பக்கத்தில், "மக்கள் நீதி மய்யத்தின் தமிழக, புதுச்சேரி நிர்வாகிகள், மாநிலச் செயலாளர்கள், மண்டலப் பொறுப்பாளர்கள் ஆகியோருடன் கட்சி வளர்ச்சிப் பணிகள், உள்ளாட்சித் தேர்தல் உள்ளிட்டவை குறித்துக் கலந்துரையாடினோம்" எனப் பதிவிட்டுள்ளார்.

# புதுச்சேரியில் ரூ.9,924 கோடிக்கு வரியில்லா பட்ஜெட்: முதல்வர் ரங்கசாமி தாக்கல்

புதுச்சேரியில் ரூ.9,924.41 கோடிக்கு வரியில்லா பட்ஜெட்டை முதல்வரும், நிதியமைச்சருமான ரங்கசாமி தாக்கல் செய்தார். அப்போது புதுச்சேரியின் மொத்த நிலுவைக் கடன் தொகை ரூ.9,334.78 கோடியாக உள்ளது.

நடப்பு நிதியாண்டில் கடன் மற்றும் வட்டி செலுத்த ரூ.1,715 கோடியை ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜக கூட்டணி அரசு ஆட்சி அமைந்து முதல்வராக ரங்கசாமி பொறுப்பேற்றார். அவர் நிதியமைச்சராகவும் உள்ளார். ஆட்சி அமைத்து முதல் பட்ஜெட்டை இன்று மாலை சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமி தாக்கல் செய்தார்.

அப்போது அவர் உரையாற்றியதாவது: "புதுச்சேரியில் 15வது சட்டப்பேரவையில் எனது முதல் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பது மகிழ்ச்சி தருகிறது. தேர்தலில் எனக்கு முழு மனதுடன் ஆதரவு அளித்த பிரதமர் மோடி மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி. பொதுமக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவும், தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும் எனது அரசு கடினமாகப் பாடுபடும். அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்துக்கும், நலிவடைந்தோரின் முன்னேற்றத்தில் சிறப்பு கவனம் செலுத்துவோம்.

பதவியேற்றவுடன் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் 10 ஆயிரம் பேரைப் புதிதாகச் சேர்த்தோம். ஓய்வூதியத்தை ரூ.500 உயர்த்தித் தந்தோம். அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் கரோனா நிவாரணமாக ரூ.3 ஆயிரம் அளித்தோம்.202122ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடு ரூ. 9,924.41 கோடி. சொந்த வருவாய் வரவினங்கள் ரூ.6,190 கோடியாகவும், மாநில பேரிடர் நிவாரண நிதியான ரூ.5 கோடியைச் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி ரூ.1,729.77 கோடியாக இருக்கும். மத்திய அரசு திட்டங்களின் கீழ் வழங்கும் நிதி ரூ.320.23 கோடியாக இருக்கும். நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க ரூ.1,684.41 கோடியை வெளிச்சந்தை மூலம் திரட்ட மத்திய அரசு அனுமதித்துள்ளது.

ரூ.1,200.44 கோடி மூலதன செலவினங்களுக்காகவும், ரூ.8,723.97 கோடி வருவாய் செலவினங்களுக்காவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.புதுச்சேரியில் கடந்த மார்ச் 31 வரை மொத்த நிலுவைக் கடன் தொகை ரூ. 9,334.78 கோடி. இது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 22.17 சதவீதம். பரிந்துரைக்கப்பட்ட நிதி நிலை குறியீட்டு வரம்புக்குள் உள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் உள்நாட்டு மொத்த வருவாய் (ஜிடிபி) 10 சதவீதம்.கடந்த 202021 நிதியாண்டில் நமது செலவு ரூ.8,342.87 கோடி. இது 202021 திருத்திய மதிப்பீட்டின் படி 92.7 சதவீதம். கரோனா வைரஸ் பரவல் மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் தரப்படும் நிதி மத்திய அரசிடம் இருந்து சில திட்டங்களுக்குக் கடந்த நிதியாண்டு இறுதியில் பெறப்பட்டதால் 64.13 சதவீதம் மட்டுமே மத்திய அரசு திட்டங்களில் செலவிட முடிந்தது. கடந்த நிதியாண்டில் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் செலவிட முடியாத மீதமுள்ள தொகை அந்தந்தத் திட்டங்களின் கீழ் நடப்பாண்டில் செலவிடப்படும்.

202122 பட்ஜெட் மதிப்பீடான 9,924.41 கோடியில் ரூ.2,140 கோடி ஊதியத்துக்கும் (21.56 சதவீதம்), ரூ.1,050 கோடி ஓய்வூதியத்துக்கும் (10.58 சதவீதம்), ரூ.1,715 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்த (17.28 சதவீதம்), ரூ.1,591 கோடி மின்சாரம் வாங்கவும் (16.03 சதவீதம்) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத்திட்டங்களுக்கு ரூ.1,290 கோடியும் (13 சதவீதம்), அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் தன்னாட்சி உயர்கல்வி நிறுவனங்கள் , பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ரூ.1,243 கோடியும் (12.52 சதவீதம்) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது". இவ்வாறு முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 25)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் கோடிக்கரைப் பயணம்

பின்பு அவள் புறப்பட்டதும், வந்தியத்வேனோ இவள் பெயர் மட்டும் அழகல்ல! அவளும் பேரழகியே! விசித்திரமான, கடுமையான செயல்களைச் செய்கிறாள். இவளின் இனிமையான பேச்சை நம்புவதா? கடுமையை வெறுப்பதா? என்னில் எத்தனை அக்கறை! எதற்காக இப்படி அக்கறைப் படுகிறாள்? என்னிடம் என்ன பிரதி உதவி கோரப் போகிறாள்? நானும் அதைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறேன்! என்று சிந்தித்த படி, காதலுக்கு கண்ணில்லை என்பது உண்மைதான்! ஆனால் பைத்தியக்காரத் தனமாக காதல் கொள்வதாகச் சொன்ன வைத்தியர் மகன் எங்கே? அழகிய பெண் தேவதையான பூங்குழலி எங்கே? இவர்களுக்குள் காதலாமே! இது என்ன பைத்தியக்காரத்தனம்? இவளைப் பார் உன் நண்பன் அதற்குள் முந்திவிட்டான் என்று என்னை அவனிற்கு எதிரியாக்கி விட்டாளே! அவனும் ஏன் எனக்கு இப்படி துரோகம் செய்தான், ஏன் இந்த நாகரிகம் அறியாத காட்டுமிராண்டிப் பெண் இத்தனை சாமர்த்தியம் கொண்டவளாக இருக்கிறாள்! என்னையே தோற்கடித்துவிட்டாள். எப்படி எப்படி யுத்திகளைப் பயன்படுத்துகிறாள் என்று சிந்தித்தான் அவன் தூக்கம் கலைந்தது. இருந்தும் அவன் களைப்பு அவனை தூக்கத்தில் வீழ்த்தியது. கொஞ்சம் தூங்கி எழுந்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமிக்கும் நேரம் இந்த அழகிய காட்சியை கோடிக்கரையில் பார்த்தால் மிக அற்புதமாக இருக்கும்! ஆனாலும் ஆசைகளை அடக்க வேண்டும் என்ற வந்தியத்தேவன், மண்டபத்தில் இருந்து வெளியில் வரவில்லை. இருளின் ஆட்சி மெல்லத் தொடங்கியது. அந்த மண்டபமே அவன் கண்களுக்கு கொடூரமாகத் தெரிந்தது. மெல்ல வெளியே வந்தான். அப்பொழுது குக்கூ! குக்கூ! என்று இனிய குரல் கேட்டு, இது பூங்குழலியின் கானம் என்று எட்டிப் பார்த்தான். அவளும் என்னுடன் வா என்று சமிக்ஞை செய்தாள். உடனே வந்தியத்தேவன் அவளை நெருங்க, கடற்கரையும் அவர்களுக்கு நெருக்கமாகவே இருந்தது. படகும் அங்கு ஆயத்தமாக நின்றது. அதில் பாயும், பாய்மரமும், அதைக் கட்டும் கயிறும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய மரக்கட்டை பொருத்தப்பட்ட அந்தப் படகை பூங்குழலி கடலில் இறக்கத் தொடங்கினாள். அவளுக்கு வந்தியத்தேவன் கைகொடுக்க வந்தான். அப்போது பூங்குழலி அவனைத் தடுத்தாள். படகை இலகுவாகத் தனியே தள்ளி கடலில் இறக்கினாள். படகில் ஏற முயன்ற வந்தியத்தேவனை பூங்குழலி 'சற்றுப் பொறு கொஞ்சத் தூரம் போன பின்பு ஏறிக் கொள்' என்றாள். தன்னம் தனியாக படகை இழுத்துச் சென்று, படகில் ஏறினாள் பின்பு அவனையும் ஏறச் சொன்னாள். அவனும் தாவி ஏறினான். படகு பெரும் ஆட்டம் ஆடியது வந்தியத்தேவன் பயத்துடன் ஒருவாறு உட்கார்ந்தான். 'பாய்மரம் கட்டவில்லையா?' என்று பூங்குழலியிடம் கேட்டான். 'பாய்மரம் எம்மைக் காட்டிக் கொடுத்துவிடும் அத்துடன் இங்கு எதிர் காற்று அடிக்கிறது. இப்போது பாய் மரம் விரித்தால் நாம் மீண்டும் கரைக்குப் போய்விடுவோம். நடு இரவில் காற்று திசை மாறிவிடும் அப்பொழுது பாய் மரத்தை விரிப்போம்' என்றாள். 'ஓ! உனக்கு யாவும் தெரிந்திருக்கிறது. அதனால் தான் உன் தந்தை உன்னை அழைத்துச் செல்லச் சொன்னார்' என்றான். 'ஆம் தரையில் என் தந்தை தியாகவிடங்கர் கடலில் என் தந்தை சமுத்திர ராஜன்' என்றாள். 'அருள்மொழிவர்மரை பொன்னியின் செல்வன் என்று கூறுவது போல், நான் என்னைச் சமுத்திர குமாரி என்று சொல்லுகிறேன்' என்றாள் பூங்குழலி. அவள் அப்படி பொன்னியின் செல்வன் என்று சொன்னதும் அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. உடனே தன் அரைச் சுருளைத் தேடிப்பார்த்தான். அது இருக்கும் இடத்தில் இருந்தது. பூங்குழலி தனியாக படகு வலிக்கிறாள் நானும் உதவினால் படகு விரைவாகப் போகும் என்று எண்ணி, அவளுக்கு உதவி செய்யப் போனான். அப்போது படகு அசையாது நின்று விட்டது! பூங்குழலி, 'நீ சும்மா இரு எப்படியாவது உன்னை நான் இலங்கைக்கு கொண்டு போவேன்' என்றாள். அப்பொழுது படகு




ஆட்டம் கண்டது. ஆட்டத்தின் வேகம் மிகைப்பட்டது. 'இது என்ன படகு தொட்டில் போல் ஆடுகிறதே ஏன் இப்படி?' என்று வந்தியத்தேவன் கேட்க, 'இது ஆள் சுழி காற்று வந்தால் படகு பேய் ஆட்டம் ஆடும் ஒரு வேளை படகு கவிழ்ந்தும் விடும்! அப்போது பாய் மரக்கட்டை தான் எமக்கு உதவும்' என்றாள். 'அது என்ன சுழல் காற்று அது எப்படித் தோன்றும்?' என்று கேட்டான் வந்தியத்தேவன். 'ஒரு பக்கம் இருந்து வரும் காற்றும், மறுபக்கம் இருந்து வரும் காற்றும் மோதிக் கொண்டால் சுழல் காற்று ஏற்படும். தை மாதத்தில் கொண்டல் காற்று அடிக்கும் இது அபாயம். இலங்கையிலிருந்து சோழக்காற்று அடிக்கும் இந்தக் காற்றை எதிர் கொள்வது மிகக் கடினம். சில சமயம் காற்றும் காற்றும் மோதிக் கொண்டால் கனத்த பள்ளம் ஏற்படும் அந்த சுழலில் படகு அகப்பபட்டால் அதோகதிதான்' என்றாள். அதைக் கேட்ட வந்தியத்தேவன் கலங்கி, 'எனக்குப் பயமாக இருக்கிறது படகைத் திருப்பு கரைக்கு போகலாம் நீ மோசக்காரி என்னை மூழ்கடித்து கொல்லப் பார்க்கிறாய்' என்று கத்தினான். பூங்குழலி, 'சும்மா பதறாதே தூங்கு இல்லாவிட்டால் குதித்துக் கரைக்குப் போ குதிக்கமுன்னர் அந்த ஓலையை என்னிடம் தந்தவிடு' என்றாள். 'ஏன் குந்தவை தேவி இப்படிப் பயந்த கோழையிடம் ஓலை கொடுத்து அனுப்பினாள் என்று தெரியவில்லை' என்று வருத்தப்பட்டாள். 'நீ மோசக்காரி படகைத் திருப்பு' என்றான் வந்தியத்தேவன். அவளோ திருப்பவில்லை. உடனே வந்தியத்தேவன் வெறி கொண்டு கடலில் குதித்தான். 'ஆழம் அறியாது காலை விடாதே' என்பது பழமொழி. வந்தியத்தேவனும் கடலின் ஆழத்தை அறியாது குதித்து விட்டான். அவனுக்கு நீச்சல் தெரிந்தும் பயம் அவனை நீந்தவிடாது தடுத்தது அவன் அலைகளால் மோதுண்டு அடித்துச் செல்லப்பட்டான். அவன் கண்களுக்கு படகும் தெரியவில்லை கண்கள் இருட்டிவிட்டது. சக்தி இழந்து தான் கடலில் மூழ்கிச் சாகப்போவதாக உணர்ந்தான். அவன் நிலைமை கண்டு பூங்குழலி கடுங் கோபம் கொண்டாள். சாகும் நேரம் இறைவனே தஞ்சம் என்று எண்ணி உமா பரமேஸ்வரனே! பழனி ஆண்டாவா! என்று கூவி அழைத்தான். அவன் அவலக் குரல் கேட்டு பூங்குழலி திகைத்தாள். இது என்ன விளையாட்டு வினையாகிறதே! இவனைக் காப்பாற்றி ஆகவேண்டும் என்று தக்க பாதுகாப்புடன் கடலில் குதித்து, நீந்திச் சென்று அவன் நெற்றிப் பொட்டில் ஒரு குத்துக் குத்தி அவனை மயக்கமடையச் செய்து, படகில் ஏற்றி அவனைக் கயிற்றால் கட்டிக் கொண்டு படகை இலங்கை நோக்கிச் செலுத்தினாள்.

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 622

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**5. தேவனுடைய பரிசுத்தம் தேவனை பாவத்தின் எதிரியாக்குகிறது**
The Holiness of God Makes God the Enemy of Sin.

தேவனுடைய பரிசுத்த நினைவும் சிந்தனையும் எப்போதும் பாவத்தை எதிர்க்கிதாகவே இருக்கிறது. பாவம் நற்சிந் தனைக்கு எதிரானதென்பதை அவருடைய குணாதிசயத்தின் அம்சமும், படைப்பினதும் ஆளுகையின-தும் நோக் கமாய் இருக்கிறது. பாவம் தேவனுடைய பரிசுத்த நினைவைத் தோற்கடிக்க நேரடியாக எதிர்கொள்கிறது, ஆகையால் தேவன் பாவத்தை எப்பொழுதும் எதிர்த்தே செயற்படுகிறார். எனவே பாவம் தோற்கடிக்கப்படும்.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **- ரோமர் 6: 22-23**

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட் டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்ப ட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். **-ரோமர் 8: 5-10**

**6. தேவனுடைய பரிசுத்தம் நாம் அவரை நம்புவதற்கு உத்தரவாதம் அழிக்கிறது** - Holiness of God Guarantees that We Can Trust Him.

தேவனுடைய பரிசுத்தம், அவரை நாம் முளுமையாக நம்புவதற்கு உத்தரவாதம் அழிக்கிறதுமல்லாமல் நாம் ஏமாற்றம் அடையாதபடியும் பாதுகாக்கும். அந்த நம்பிக்கை எம்மை ஒருபோதும் வெட்கப்பட்டுப்போக அவர் விடமாட்டார். மேலும் தேவனுடைய பரிசுத்தம் நாம் அவர்மேல் நம்பிக்கை வைப்பதற்கு உறுதியான ஆதாரமாயும் இருக்கிறது. அவர் வாக்கு மாறாதவர், சொன்னதைச் செய்கிறவர், சொல்லியும் செய்யாமல் இருப்பதற்கு அவர் மனுஷனல்ல. அவ்வளவாக அவரை நாம் நம்பலாம், அது அவருடைய பரிசுத்தத்தின் குணாதிசயம், அதில் மாற்றமுமில்லை மாறுதலும் இல்லை, அதுவே எமக்கு உத்தரவாதம்.

கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத்தன்வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறது மான மரத்தைப்போலிருப்பான். **- எரேமியா 17: 7-8**

யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ளயாவையும் உண்டாக்கினவர், அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர். **- சங்கீதம் 146: 5-6**

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார். **- சங்கீதம் 55: 22**

நம்பிக்கைக்குப் பாத்திரரான கர்த்தரை நாம் முற்றும் முழுவதுமாக நம்பலாம். ஆகையால்தான் அவருடைய வார்த்தைகளும் வாக்குத்தத்தங்களும் ஆம் என்றும் ஆமேன் என்றும் சொல்லப்படுகிறது.

**பரிசுத்தமும் நீதியும்** - Holiness & Righteousness

பரிசுத்தம் - நீதி. இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. இவ் வார்த்தைகள் இரண்டு அம்சங்களைக்கொண்ட ஒரே நிலைப்பாட்டை உடையதாய் வேதத்தில் காணப்படுகிறது. பரிசுத்தம் ஒரு-வருடைய குணாதிசயத்தோடு (character) சம்பத்தப்பட்டது, "நீதி"ஒருவருடைய நடத்தையோடு (conduct) சம்பந்தப்பட்டது. எப்படி ஒரு மரத்தின் வேரும், கனி-யும் நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறதோ அப்படியே இச் சொற்கள் இரண்டும் அமைந்திருக்கின்றன. வேர் இல்லாமல் கனி இருக்கமுடியாததுபோல பரிசுத்தம் இல்லாமல் நீதியாய் செயற்பட முடியாது. பரிசுத்தம்தான் எம்மை நீதியாய் நடப்பிற்கிறது.

பரிசுத்தம் ஒருவர் இருக்கும் நிலையை விபரிக்கிறது, "நீதி" அவருடை-ய நடத்தையை விபரிக்கிறது. ஆகையால் நாம் பரிசுத்தமாய் இருக்கவும் நீ-தியாய் நடக்கவும் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், எனவே அதற்கு அமைய ஜீவிக்க வேண்டுமாயின் எமது வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழ முன்வருவேண்டும்.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **- ரோமர் - 6 : 22-23**

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மலேசியாவின் 9–ஆவது பிரதமர் இஸ்மாயில் சப்ரி அடங்கியது அரசியல் கொந்தளிப்பு



கோலாலம்பூர், ஆக.20:

**நா**ட்டின் ஒன்பதாவது பிரதமராக டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் அறிவிக்கப்பட்டிருக்கிறார். கனடாவின் உதயன் இதழ், மலேசியவாழ் தமிழ் நெஞ்சங்களுடன் இணைந்து புதிய பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்கிறது.

அம்னோ கட்சியின் தேசிய உதவித் தலைவரும் 13-ஆவது துணைப் பிரதமராக பொறுப்பு வகித்தவருமான இஸ்மாயில் நாளை சனிக்கிழமை பிற்பகலில் புதிய பிரதமராக பதவிப் பிரமானம் ஏற்க இருக்கிறார்.

இதன்வழி நாட்டைச் சூழ்ந்திருந்த அரசியல் கொந்தளிப்பு அடங்கியுள்ளதாக நாட்டு மக்கள் கருதலாம். இது, நிரந்தரமா அல்லது இடைக்காலத்திற்குத்தானா என்பது இந்தக் கூட்டணி மேற்கொள்ள இருக்கும் அடுத்தக் கட்ட நகர்வைப் பொறுத்தே தெரியவரும்.

உண்மையில் நாட்டின் பெரிய மாநிலமான பகாங்கிற்கு இஸ்மாயில் பெருமையை தேடித் தந்திருக்கிறார். அந்த மாநிலத்தில் இருந்து நாட்டின் உயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மூன்றாவது தலைவர் இவர்.

இரண்டாவது பிரதமர் துன் ரசாக்கும் ஆறாவது பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப்பும் மேற்கு மண்டல மாநிலமான இதே பகாங்கைச் சேர்ந்தவர்கள்.

ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் ஆரம்பித்த அரசியல் முறுகல் நிலை, இந்த வாரத் தொடக்கத்தில் டான்ஸ்ரீ மகியாடின் யாசின், பிரதமர் பதவியில் இஉர்ந்து விலகியதால் அரசியல் கொந்தளிப்பாக உருமாறியது.

கடந்த வெள்ளிக்கிழமை தேசியக் கூட்டணி அமைச்சர்கள் புத்ராஜெயாவில் உள்ள தங்கள் அலுவலகங்களை காலி செய்ய ஆரம்பித்ததுமே, மஹியாடின் பதவி விலகப் போவது உறுதியானது. அப்போது ஆரம்பித்த அரசியல் பரபரப்பு இந்த வெள்ளிக்கிழமை முடிவுக்கு வந்திருக்கிறது.

இன்று மாலையில் அரண்மனை முத்திரைக் காப்பாளர் அகமட் ஃபாடில் ஷம்சுடின் மாட்சிமைக்குரிய மாமன்னர் அல் சுல்தான் அப்துல்லா சார்பில் வெளியிட்ட அறிக்கையில் நாட்டின் அடுத்த பிரதமராக இஸ்மாயில் சப்ரி யாக்கோப் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார்.



முன்னதாக மலாய் ஆட்சியாளர் மன்றக் கூட்டம் நடைபெற்றது. கிளந்தான், ஜோகூர் மாநிலங்களின் சுல்தான்கள் மற்றும் பெர்லிஸ் ராஜா ஆகியோரின் வாகனங்கள் அரண்மனை நுழைவாயிலில் தென்படாத நிலையில், மாலை 4:00 மணிக்குப் பின் கூட்டம் முடிந்து ஒவ்வொரு மாநில ஆட்சியாளராக வெளியேறிய நிலையில் அடுத்த பிரதமருக்கான அறிவிப்பு எந்த நேரமும் வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பு ஊடகத்தினரை மட்டுமல்ல் நாட்டு மக்களையும் தொற்றிக் கொண்டது.

அதன்படியே அரண்மனையில் இருந்து அறிவிப்பும் சுடச்சுட வெளியானது.

ஆகஸ்ட் 21 சனிக்கிழமை பிற்பகல் 2:30 மணி அளவில் புதிய பிரதமர் பொறுப்பு ஏற்க இருப்பதன்வழி, கொரோனா பரவலால் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சுகாதாரப் பணிகள் தொய்வின்றி தொடரும் என்றும் அதைப்போல பொருளாதார மீட்சி நடவடிக்கையும் புது உத்வேகம் பெறும் எனவும் மாமன்னர் தெரிவித்த தகவலையும் முத்திரைக் காப்பாளர் தெரிவித்தார்.

220 எம்பி-க்களில் 114 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றதன்வழி இஸ்மாயில் சாப்ரி, நாட்டின் 9-ஆவது பிரதமராக அரண்மனை சார்பில் அறிவிக்கபடுகிறார் என்றும் முத்திரைக் காப்பாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மழைவிட்டும் தூவானம் விடாத கதையைப் போல, இஸ்மாயில் சப்ரிக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவைத்தான் பெர்சத்து கட்சி வழங்கும் என்று மகியாடின் அறிவித்துள்ளதால் மிரண்டுபோயிருக்கும் அம்னோ நேற்றிரவே இரகசியக் கூட்டத்தை நடத்தியுள்ள நிலையில் நாளை மீண்டும் அதன் உச்சமன்றக் கூட்டத்தைக் கூட்டியுள்ளது.

நாட்டின் 15-ஆவது பொதுத் தேர்தல் இடம்பெற இன்னும் 18 மாதங்களே உள்ள நிலையில், இஸ்மாயில் சப்ரி உண்மையில் ஓர் இடைக்கால பிரதமராகத்தான் பொறுப்பு வகிக்கக்கூடும். அதுவரையாவது, தன்னுடைய தலைமையிலான ஆட்சியை சிந்தாமல் சிதறாமல் கொண்டு செல்வாரா, அல்லது எதிரும் புதிருமான மனநிலையைக் கொண்டவர்கள் அடங்கிய இந்தக் கொல்லைப்புறக் கூட்டணி மீண்டும் பழையபடி முட்டி மோதிக் கொண்டு கவிழுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

61 வயதான இஸ்மாயில் உண்மையில் அமைதியான தலைவரும் திறமையான அரசியல்வாதியும் ஆவார்.

அடிப்படையில் ஒரு வழக்கறிஞரான இவர், 1987-இல் தெமர்லோ மாவட்ட மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து தெமர்லோ முனிசிபல் கவுன்சிலாரகவும் பொறுப்பேற்று தன் பொதுவாழ்வைத் தொடங்கினார். அதே ஆண்டில்தான் அம்னோ தெமர்லோ தொகுதியில் உறுப்பினாராக தன்னை இணைத்துக் கொண்டு அதன்பின் படிப்படியாக அரசியலில் உயர்ந்த நிலையை எட்டினார்.

நக்கீரன்

இருந்தாலும், பினாங்கு மாநிலத்தில் உள்ள பெர்மாத்தாங் பாவ் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமின் மகளுமான நூருல் இஸாவை தேசத் துரோகி என்று துடுக்குத் தனமாக பேசியதற்காக இஸ்மாயில் அவதூறு மற்றும் மானநட்ட வழக்கை எதிர்கொள்ள நேர்ந்தது. 2015-இல் தொடரப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த பொதுத் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு வெளியிடப்பட்டது. அதன்படி, இஸ்மாயில் சப்ரி ஆறு இலட்ச வெள்ளியை நூருலுக்கு செலுத்த நேர்ந்தது.



இஸ்மாயிலின் அரசியல் வாழ்க்கையில் இது ஒரு கறுப்பு அத்தியாயம்.

எது எவ்வாறாயினும் புதிய பிரதமர் அரசியல் விளையாட்டைவிட நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள சிக்கலைக் களைவதற்காக பாடுபடுவார் என்ற நம்பிக்கையை நடுநிலையாளர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

நாமும் அப்படியே நம்புவோம்!.

*(அண்ணா, இஸ்மாயில் படத்தை இணைக்க முடியவில்லை தங்களுக்கு புலனத்தின்வழி அனுப்பி உள்ளேன். அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்)*

**நக்கீரன்** - Nakkeeran **013-244 36 24**

# வங்கக் கடலில் நிலநடுக்கத்தால் சென்னையில் நில அதிர்வு




**செ**ன்னைக்கு கிழக்கே வங்கக் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், அதன் தாக்கத்தால் சென்னையின் கடலோர பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து 296 கி.மீ., தொலைவில் வங்கக்கடலில் 10 கி.மீ., ஆழத்தில் இன்று (ஆக.24) பகல் 12.35 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 5.1 ஆகப் பதிவாகியிருந்த இந்த நில நடுக்கத்தை தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம் உறுதி செய்தது. இதனால் ஆந்திரா மற்றும் தமிழக கடலோர பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

குறிப்பாக தமிழகத்தில் சென்னையில் 12.50 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. திருவான்மியூர், அடையாறு, கேளம்பாக்கம், ஆழ்வார்பேட்டை, தேனாம்பேட்டை, பெசன்ட் நகர் உள்ளிட்ட பகுதி மக்கள் இந்த நிலநடுக்கத்தை உணர்ந்தனர். இதனால் அப்பகுதி மக்களிடையே சிறிது நேரம் பீதி நிலவியது.

சென்னையில் பல இடங்களில் நில அதிர்வு ஏற்பட்டாலும், எவ்வித அசம்பாவித சம்பவமும் ஏற்பட வில்லை. வங்கக்கடலுக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# இவ்வார ராசிபலன்

**27-08-2021 வெள்ளி தொடக்கம் 02-09-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய நேர்த்தியான வாரம். காரியம் வெற்றி தரும். நட்பு பெருகும். பணப் பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான நாள். நந்தி வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** தட்டிப்போன வாய்ப்புகள் தானாகக் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். விநாயகர் வழிபாடு வெற்றி தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். திடீர் செலவுகள் ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாகும். நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: விஷ்ணு பகவான், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** கடைத்தெடுத்த கவலைகள் காணாமல் போகக்கூடிய நல்ல வாரம். அமைதியான நாள். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பங்குத் தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** மாற்று யோசனையை வெளிப்படுத்தி ஏற்றம் காணக்கூடிய நல்ல வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: யோக நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R





**சிம்மம்:** வயதுக்குத் தகுந்த வளம் கிடைக்கக்கூடிய நலமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** வழக்கத்திற்கு அதிகமான வரவுகள் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** கடுமையான முயற்சிகளுக்குப் பெருமையான வாய்ப்பு கிடைக்கக்கூடிய வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**தனுசு:** வாட்டி வதைத்த வருத்தங்கள் வக்கனையாய் விலகக்கூடிய நல்ல வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்களமாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மகரம்:** பொலிவான மணவாழ்க்கை பொருத்தமாக அமையக்கூடிய பொன்னான வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கும்பம்:** முற்பகலிலேயே முக்கிய மாற்றங்கள் நிகழக்கூடிய நல்ல வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமி கணபதி, அதிர்ஷ்ட எண் 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மீனம்:** ஆனந்தப் பயணமும் அதிஅற்புத மகிழ்ச்சியும் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்தி பாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

---

## வீணாவின் கவிக்கணை

இந்த நொடியோ
இந்த நிமிடமோ
இப்படியே இருந்துவிடப்
போவதில்லை,
இதில் உள்ள
இன்பமும் சரி
துன்பமும் சரி, நிலைத்து
நிற்கப்போவதுமில்லை,
இறுகிய மனதை லேசாக்கி,
இழகிய மனதை உரமேற்றி,
வருகிற நாட்களுக்கு
வழிகாட்டி, வெளிச்சத்தை
நீயும் சென்றடைவாய்.



ஜீவன் முக்தி (பகுதி ) 122

# உங்களுடனே இருக்கும் சகுனிதான் உங்களுடைய பட்டறிவு

சகுனி, யார் என்றால் உங்களை அறியாமலேயே. எல்லோர் மேலேயும், சன்தேகம் வரவழைத்து, தன்மேல் மட்டும் சநதேகமே வராமல் பார்த்துக் கொள்கிற பட்டறிவுதான் சகுனி.
சகுனி, மற்ற எல்லோர் மீதும் துரியோதனனுக்கு சந்தேகம் வர வைத்துவிட்டான். துரியோதனன் மனதில் எல்லோர் மேலும் சந்தேகம் வரவைத்து எல்லோரையும் நம்ப விடாமல் செய்துவிட்டான். ஆனால். இவன் மீது மட்டும் சந்தேகம் வராமல் பார்த்துக் கொண்டான்.
முதல் குற்றவாளி யார்?
சகுனிதான், துரியோதனனை அழப்பதற்காகவே, துரியோதனன் கூடவே உட்கார்ந்து கொண்டு, ஆனால் தன்னைத் தவிர, மற்ற எல்லோருமே துரியோதனனை அழிப்பதற்காகத்தான் இருக்கிறார்கள் என்பது போல, துரியோதனனுக்குப் புரிய வைத்து, துரியோதனனுடைய மனதிலே மாயையை ஏற்படுத்தியவன்.
நம்முடைய தர்க்க அழறி அப்படித்தான்.
நம்மை அழிப்பதற்காகவே நம்முடன் உட்கார்ந்து கொண்டு ஆனால், அதைத்தவிர, மற்ற எல்லாவற்றையும் சந்தேகப்படுகிற மாதிரி பார்த்துக் கொண்டு, அதை சந்தேகப்படாமலே இருக்க வைக்கிற அந்த, பகுத்தறிவுக்குத்தான் சகுனி என்று பெயர்.
அடுத்து சகுனியோடு யுத்தம்.
சகுனியை எப்படி அழிப்பது?
நேர்கொண்டு அப்படியே அழிப்பது. இவ்வளவுதான். வேறு வழியே கிடையாது. அதைததான் செய்தார். தர்க்க அறிவை மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. புறந்தள்ளுவது மூலகமாகவே அழித்து விடுவது.
சீ சும்மா உட்கார். என்றால் அழிந்து போய்விடும். அதனால்தான் என்ன செய்தார்? மிக எளிமையாக சகுனியை அழித்துவிட்டார்.

## அகங்காரத்தை தனியாக அழிக்க முடியாது

அதற்கு அடுத்து கடைசியாக வருவதுதான் துரியோதனன். நம்முடைய அகங்காரம். இது மிக முக்கியமான காட்சி அந்த இடத்தில் ஜீவாத்மாவில் கூட அகங்காரத்தை அழிக்க முடியாது. அங்கே மற்றொரு துணை வேண்டும். சகுனியை அழிக்க ஜீவாத்மாவினுடைய ரஜோ குண பலம்தான் பீமன். பீமனை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார்.
அந்த அகங்காரம் என்ன செய்கிறது? குளத்திற்குக் கீழ் சென்றுதான் மறைந்து கொண்டு இருக்கிறது. துரியோதனன் குளத்திற்குக் கீழ் சென்றுதான் மறைந்து இருக்கிறான். உங்களால் நேரடியாக அகங்காரத்தைக் கண்டுபிடித்து அதை அழிக்க முடியாது.
அது என்ன செய்யும்? சித்தம் என்கிற குளத்துக்குள்ளே மறைந்து கிடக்கும். சித்தம் என்றால் உங்களுடைய எண்ணங்கள். அதுதான் சித்தம். பொங்கிக்கொண்டே இருக்கிற எண்ணங்கள். அதனுடைய ஒரு மூலையில் அகங்காரம் என்கிற துரியோதனன் மறைந்து கிடப்பான். அதை வெறுமனே அர்ஜ-னனால் வெளியே எடுக்க முடியாது.
அர்ஜனுடைய ரஜோகுணமாகிய பீமனை அழைத்து வருகிறார். ஜீவாத்மாவினால் மட்டும் முடியாது. ஜீவாத்மாவினுடைய பலமான புத்தி. தீ என்கிற பலம் வேண்டும். ஜீவாத்மா செய்த எல்லாத் தவத்தினுடைய சாரம்தான் பீமன். புத்தி என்கிற பலம். தீ என்கிற பலம். அதை எடுத்துக் கொண்டு வரச்சொன்னார். அதோடு பீமன் வந்து இறங்கினார்.

அப்போது கிருஷ்ணர் சொன்னார், துரியோதனனை வெளியே அழை. பீமன் கூப்பிட, துரியோதனன் வெளியே வந்தான். அகங்காரம் வெளியே வந்தது, சித்தத்தை விட்டு.
சித்தம் என்கிற குளத்தை வற்றச் செய்தால், துரியோதனன் என்ற அகங்காரம் வெளியில் தெரியும்.
அப்படியென்றால் என்ன அர்த்தம்?
எண்ணங்கள் இல்லாமல் செய்ய வேண்டும்.
எண்ணங்கள் இல்லாமல் செய்தால் அகங்காரம் வெளியில் தெரியும். அகங்காரம் வெளியில் தெரிந்த உடனே அவனுக்கு மகப் பெரிய கோபம் வந்துவிடும்.
என்னுடைய தவத்தையா கலைத்தாய் என்று.
துரியோதனனுக்கு மஹா கோபம் வந்து விடுகிறது. என்னுடைய தவத்தையா கலைத்தாய்?' என்று வேகமாய் குதிக்க ஆரம்பித்து விட்டான்.
அகங்காரத்தை எங்கு அடித்தும் சாகடிக்க முடியாது. ஏனென்றால் எங்கே அடித்தாலும் அது பலமாக இருக்கும்.
ஒரே ஒரு இடத்தில் அடித்தால் மட்டும்தான் அது விழும். அந்த இரகசியமான இடத்தை ஞானசற்குருவால்தான் சொல்ல முடியும். அதனால்தான் எந்தத் தொடையில் அடிக்க வேண்டும் என்று தட்டித், தட்டி காண்பிக்கிறார்.
கிருஷ்ணன் என்ன செய்தார்? தொடையைத் தட்டித் தட்டிக் காண்பித்து, இங்கே அடி, இங்கே அடி என்று சொல்கிறார்.
எந்த இடத்தில் அடித்தால் அகங்காரம் கீழே விழும் என்று, ஞான சத்குருநாதனுக்குத்தான் தெரியும். உங்களுடைய தவம் முழுமையும் ஒன்றாக்கி அந்த இடத்தில் அடிப்பதற்குச் சொல்கிறார்.
அகங்காரத்தை எந்த இடத்தில் அடித்தீர்களென்றாலும் அழிக்க முடியாது. அது ஸ்திரமானது. உங்களைவிட ஸ்திரமான அகங்காரத்திற்கும் கூட பலவீனமான இடம் ஒன்று உங்களுக்குள் இருக்கிறது.
நான் யார் என்று கேட்பது.
நான் யார்? என்கிற கேள்விதான் தெடையிலே அறையப்பட்ட கதாயுதம் மாதிரி. வலது தொடையிலே அறையப்பட்ட கதாயுதம்.
நான் யார்? என்று கேட்கிற அந்தக் கேள்விதான் கதாயுதம். கூர்மையான, ஆழமான தவம்தான் பீமன். அகங்காரம்தான் துரியோதனன். துரியோதனன் என்ற அகங்காரத்தை நீங்கள் எந்த விதத்திலும் அழிக்க முடியாது. எப்படியாவது ஒரு விதத்தில் சுற்றி வந்து விடும். எப்படியாவது ஒரு விதத்தில் வேறு வழியில் மீண்டும் மீண்டும் வந்து விடும்.
பீஷ்மராக வந்ததும், இந்த துரியோதனனுடைய பிரதிநிதிதான். சகுனியும் துரியோதனனுடைய பிரதிநிதிதான். எல்லோருமே துரியோதனனுடைய பிரதி-



நிதிதான்.
ஆனால் அவர்கள் அத்தனை பேரையும் அழித்து முடிந்தாலும், அகங்காரத்தை நேரடியாக அழிக்க முடியாது. அதனால்தான் கிருஷ்ணர் மிகவும் அழகாக ஒரு நுட்பத்தைக் கொடுத்தார். எங்கே அடிக்க வேண்டும் என்று சொன்னார். அதுதான் கடைசியாகக் கொடுக்கப்படுகின்ற ஆனந்த கந்த தீட்சை. எங்கே குத்தவேண்டும் என்று சரியாகச் சொன்னார்.
கதாயுதம் எங்கே குத்த வேண்டும் என்று சரியாகச் சொன்ன உடனே, பீபம் தொடையிலே அடிக்கிறான். துரியோதனன் கதை முடிந்தது.
அகங்காரம் நான் யார்? என்ற கேட்க, அந்த ஒரே அடியினாலேயே தான் யார் என்று தெரியாததால் தனக்கு ஒரு இருப்பு இல்லாததனால், அகங்காரம் என்ற துரியோதனன் அழிந்து. ஜீவாத்மாவாகிய அர்ஜு னன், பரமாத்மா ஆகிய கிருஷ்ணனை அடைந்து ஞான நிலையிலே மலருகின்றான்.

*(தொடரும்...)*


----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080




**TITLE SPONSOR**

TD

**POWERED BY SPONSOR**

iConnect Mortgages

**SUPPORTED BY**

Canada Toronto

#SHOW LOVE TO

**MEDIA SPONSORS**

ATN Asian Television Network

East FM 102.7

**SILVER SPONSORS**

Chapel Ridge Funeral Home & Cremation Centre

Edward Jones — Making Sense of Investing — Raj Thavaratnasingham, Financial Advisor

Honda Formula Honda — Where You're Treated like Family.

HomeLife — Higher Standards — HomeLife Future Realty Inc.

JC's Banquet & Convention Centre

Nava Wilson LLP — Barristers and Solicitors

Pradon Silks — Where Fashion Begins...

Vibrant Hospitality Group

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

### ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....




மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...




காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM - 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3





# ஸ்காபுறோ வைத்தியசாலை நிறுவனத்திற்கு 5000 டாலர்களை வழங்கிய ஸ்காபுறோ ஆதிபராசக்தி குரு மன்றம்

கனடா ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் ஆதிபராசக்தி குரு மன்றத்தின் ஸ்தாபகர் திருமதி ஞானம்மா திருநாவுக்கரசு, ஸ்காபுறோ வைத்தியசாலைகள் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரிடம் 5000 டாலர்கள் பெறுமதியான காசோலையை நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கையளித்தார். இந்த நிதி வைத்தியசாலையின் தேவைக்காக பயன்படுத்தப்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
இங்கே காணப்படும் படம் வைத்தியசாலை வளாகத்தில் எடுக்கப்பெற்றது.

# மலேசிய தமிழ் மாணவர்களின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்த கனடா உதயன் நிறுவனம் நடத்தும் அரங்கம்




மலேசியா வாழ் தமிழ் மாணவர்களின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்தும் வகையில் கனடா உதயன்பத்திரிகை நிறுவனம் நடத்தும் மாதாந்த அரங்கம் எதிர்வரும் ஆகஸட் 29ம் திகதி நடைபெறவுள்ளது.
இணையவழி **( ZOOM ID: 389 007 0553 / Passcode: JA56855)** இணைப்பு இலக்கம் மற்றும் விபரங்களுக்கு இங்கு காணப்படும் அறிவிப்பு பிரசுரத்தைப் பார்க்கவும்.

# THEVA LAW PROFESSIONAL CORPORATION நிறுவனத்தின் புதிய அலுவலகத்தின் திறப்பு விழா



**THEVA LAW PROFESSIONAL CORPORATION** நிறுவனத்தின் புதிய அலுவலகத்தின் திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. மேற்படி அலுவலகம் **Unit 208, 3 Centre Road, Markham (Markham & Highway 7)** என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது.
மேற்படி திறப்புவிழா வில் நண்பர்கள் வர்த்தக அன்பர்கள் மற்றும் கிறிஸ்த்தவ பாதிரிமார் என பலரும் கலந்து கொண்டு பிரார்த்தனைகள் செய்து வாழ்த்துரைகளையும் வழங்கினார்கள்.

# Scarborough Rouge Park தொகுதி லிபரல் வேட்பாளர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம்



**Scarborough Rouge Park** பாராளுமன்றத் தொகுதியின் லிபரல் கட்சியின் வேட்பாளர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பெற்றது.
**Unit 111-875, Milner Avenue, Scarborough.** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்தின் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் லிபரல் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

# Markham -Thornhill பாராளுமன்றத் தொகுதியின் லிபரல் வேட்பாளர் Mary Ng யின் தேர்தல் பிரச்சார அலுவலகம்



**Markham -Thornhill** மத்திய பாராளுமன்றத் தொகுதியின் லிபரல் கட்சியின் வேட்பாளர் **Mary Ng** அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பெற்றது.
**Markham and Denision Intersection.** ல் அமைந்துள்ள மேற்படி அலுவலகத்தின் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் லிபரல் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். ஆதரவாளர்கள் பலரும் அங்கு கூடியிருந்தனர்.
உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் தனது நண்பர்களுடன் அங்கு சமூகமளித்திருந்தார்.
(செய்தியும் படமும்- சத்தியன்)